★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரீஸ்
★ டபிள் செற் பீஸ் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி பட்டு சோலை
70, 71A, சிறப்பு அங்காடி நவீன சந்தை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு ஏற்ற பட்டுப் புடைவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேற் வகைகளுக்கு
ராசி சில்க்ஸ்

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 12 வெள்ளிக்கிழமை (26 - 05 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 180

# ராணுவத்திலிருந்து மூத்த அதிகாரிகள் ஒய்வு பெறுவதற்கு அரசு தடை விதிப்பு

## பற்றாக்குறையை தவிர்க்க நடவடிக்கை

கொழும்பு, மே 26

ஓய்வுபெறும் காலம் முடிவடைவதற்கு முன் எவரும் ஒய்வு பெற முடியாது என்று முப்படையினருக்கும் அரசு உத்தரவிட்டுள்ளது. யுத்தத்துக்கு முகம் கொடுக்க அஞ்சி இராணுவத்திலிருந்து மூத்த அதிகாரிகள் ஓய்வுபெறுவதைத் தடுப்பதே இதன் நோக்கம் என்று நம்பப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடன் பெரும் யுத்தம் ஒன்றுக்கான முஸ்தீபுகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ள இவ்வேளையில் இராணுவத்திலிருந்து சொல்லிக் கொள்ளாது விலகிச் செல்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது

விடுமுறையில் தமது சொந்த ஊர்களுக்குச் செல்லும் சிப்பாய்களும், பொலீஸாரும் கடமைக்கு திரும்பத் தவறும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

இதனை நிவர்த்தி செய்வதற்காக அரசு புதிதாக 10 ஆயிரம் பேரை ராணுவத்தில் சேர்ப்பதற்கு சமீபத்தில் அவசரமாக நேர்முகப் பரீட்சையை நடத்தி இருந்தது.

புதியவர்களைச் சேர்த்து பயிற்சி அளித்து புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுத்துச் செல்ல உள்ள வேளையில் மூத்த ராணுவ அதிகாரிகள் சிலர் ஓய்வுபெறும் காலத்துக்கு முன்னர் ஓய்வுபெற முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் முப்படைகளிலும் உயர் அதிகாரிகள் பற்றாக்குறையாக உள்ளனர்.

யுத்தம் நடந்து கொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில் எதுவித பொறுப்புணர்வு அற்ற தன்மையுடன் இவர்கள் ஓய்வு பெறுவதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

[6ஆம் பக்கம் பார்க்க]

## செஞ்சிலுவை அதிகாரிகள் யாழ். வருகை

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி மொரோ இன்று யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

திருகோணமலையில் இருந்து "சிடான்சர்" கப்பல் மூலம் வரும் இவருடன் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் கொழும்பு அலுவ

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஏழு கிராமங்களில் இரவு நேர ஊரடங்காம்

### அரச அதிபருக்கு தகவல்

வடமராட்சி மற்றும் வலி - கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த ஏழு கிராமங்களில் இரவு நேர ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக பலாலி இராணுவ முகாமிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை பலாலி முகாம் இராணுவத்தினர் தமக்கு அறியத்தந்ததாக, யாழ் அரச அதிபர் நேற்று விடுத்த பத்திரிகைக் குறிப் பொன்றில் தெரிவித்தார்.

மாலை ஆறு மணி தொடக்கம் காலை 6 மணி வரையான இரவு நேர ஊரடங்கு நேற்று 25 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்திருப்பதாகவும் —

இந்த இரவு நேர ஊரடங்கு மறு அறிவித்தல் வரை நடைமுறையில் இருக்கும் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

கெருடாவில், தொண்டமானாறு, உடுப்பிட்டி, இடைக்காடு, அச்சுவேலி, புத்தூர் மேற்கு, வசாவிளான் ஆகிய ஏழு கிராமங்களிலுமே இரவு நேர ஊரடங்கு அமுல் செய்யப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

யாழ். — வல்லை — யாழ்ப்பாண வீதியை பயன்படுத்தாமல் கொடிகாமம், சரசாலை வீதியைப் பயன்படுத்துமாறும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாமிசம், மீன் போதும்; காய் கறிதான் இல்லை

### பலாலி தளபதி கூறுகிறார்

கொழும்பு, மே 26

"பலாலியில் தாராளத்தில் அடைக்கப்பட்ட மாமிசம், மீன் போன்றவை போதுமான அளவு இருக்கின்றன. ஆனால் காய், கறி வகைகள்தான் போதியளவு இல்லை. தேவையான காய்கறி வகைகளை இராணுவத்தினரால் நடத்தப்படும் பண்ணைகளில் இருந்து பெற்றுக் கொள்கிறோம்".

பலாலி விசேட அதிரடிப்படையின் தளபதி மேஜர் ஜெனரல் சிறிலால் வீரசூரிய "ரூபவாஹினி" க்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பலாலியில் உள்ள இராணுவத்தினரின் மனவலிமை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் பெருமளவு இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், மே 26

வலி. கிழக்குப் பகுதியில் — குறிப்பிட்ட சில பகுதிகளில் — இருந்து நேற்றுக் காலை முதல் மக்கள் வெளியேறத் தொடங்கினர்.

கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல், குழந்தை குட்டிகளுடன் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு மக்கள் வீதிகளில் சாரி சாரியாக இடம் பெயர்ந்து சென்றதை அவதானிக்க முடிந்தது.

அச்சுவேலி வடக்கு தோப்பு, தென்மூலை பத்தமேனி, அச்சுவேலி தெற்கு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் புத்தூர், சிறுப்பிட்டி, ஆவரங்கால பகுதிகளில் தஞ்சமடைந்தனர். இன்னும் பலர் தூர இடங்களை நாடிச் சென்றனர்.

[ஒ-15-3-11-173]

## சிப்பாய்கள் மூவர் பலி

யாழ்ப்பாணம், மே 26

மட்டக்களப்பு புலிபாய்ந்தகல் பகுதியில் கடந்த சனிக்கிழமை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

புலிபாய்ந்தகல் முகாமில் இருந்து ரோந்துப் பணிக்காக வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் திடீர் தாக்குதலை தொடுத்தனர் என்றும்.

இத் தாக்குதலிலேயே மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் "புலிகளின் குரல்" செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

## 11 ஆயிரம் படையினர் இதுவரை உயிரிழப்பு!

கொழும்பு, மே 26

1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் முனைப்பு பெற்றுள்ள யுத்தத்தில் இதுவரை 11 ஆயிரம் ஸ்ரீலங்காப் படையினர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிகின்றன,

மேலும் 8 ஆயிரம் படையினர் மிகவும் மோசமாக உடல் ஊனமுற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1990 ஆம் ஆண்டு ஆரம்பித்த இரண்டாம் ஈழப்போரிலேயே அதிக எண்ணிக்கையான படையினர் உயிரிழந்துள்ளனர் என்று புள்ளி விவரம் ஒன்று தெரிவிக்கிறது.

[ஒ-3]

## யுத்தம் குறித்து பேசுவதற்கு நாடாளுமன்றில் அனுமதி மறுப்பு

கொழும்பு, மே 26

வடக்கு - கிழக்கு யுத்தம் குறித்து நாடாளுமன்றத்தில் பேச அனுமதி மறுக்கப்பட்டது.

நேற்று நாடாளுமன்றம் கூடியபோது ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரத்ன வட - கிழக்கு யுத்தம் குறித்து பேசியபோதே குழுக்களின் பிரதித் தலைவர் ராஜூப் ஹக்கீம் அவர் பேசுவதற்கு அனுமதி மறுத்தார்.

திலக் கருணரத்ன எம்.பி. பேசுகையில் கூறியதாவது:

வட - கிழக்கு யுத்தத்துக்கு மேலதிகமாக 300 கோடி ரூபாவை ஒதுக்க நாடாளுமன்றத்தில் பிரேரணை கொண்டுவர அரசு முயல்கிறது. அரசின் அசமந்தப் போக்கே இதற்குக் காரணம்.

வடக்கு - கிழக்கு யுத்தம் தொடர்பான பிரச்சினையை அரசு முறையாக அணுகவில்லை. எதிர்க்கட்சியினரின் எச்சரிக்கையை அரசு மதிக்கவில்லை என்று கூறினார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்களும், அரச நாடாளுமன்ற உறுப்பினர்களும திலக் கருணாரத்னவின் உரை தொடர்பாக குழுத் தலைவரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

யுத்தம் தொடர்பான விட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கிலிருந்து வரும் கப்பலில் குண்டுகள்

### திவயின பத்திரிகை தகவல்

கொழும்பு, மே 26

வடக்கிலிருந்து கொழும்பு வரும் கப்பல்களில் குண்டுகளைப்பொருத்தி கொழும்புத் துறைமுகத்தில் பாரிய குண்டு வெடிப்புக்களை நிகழ்த்த திட்டமிடப்படுவதாக "திவயின" நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக கொழும்புத் துறைமுகம் தற்போது கடற்படையினரின் பொறுப்பில் விடப்பட்டிருப்பது தெரிந்ததே, (இ-6)

## கிழக்கில் படையினரால் தமிழர் திட்டமிட்டமுறையில் படுகொலை

யாழ்ப்பாணம், மே 26

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் தமிழ்மக்கள் மீதான படுகொலைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

ஸ்ரீலங்கா அரச படையினரால் திட்டமிட்ட முறையில் தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த செவ்வாயன்று மட்டக்களப்பு ஜயந்திபுரம், இருதயபுரம் பகுதிகளில் படையினர் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை 9 என முன்னர் அறிவிக்கப்பட்டது.

ஆனால், கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் தோல்வியுறும் படையினர் திட்டமிட்ட முறையில் தமிழ்மக்களை படுகொலை செய்து வருகின்றனர்.

அதேசமயம் முஸ்லிம் குண்டர்களை தூண்டி விட்டு அவர்களையும் படையினர் படுகொலை நடவடிக்கையில் ஈடுபடுத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை திருகோணமலை மூதூர் சட்டைபறிச்சான், காட்டுப்பகுதியில் குறைந்தது 24 தமிழ் மக்கள் முஸ்லிம் காடையர்களால் படுகொலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

முச்சந்தி முராளி



முத்தி எண்டால் ஹெலியில் வந்தாவது ஊரடங்கை அமுல் செய்திருப்பினம் பாருங்கோ ...!!

## அனுருத்த வீட்டின் அருகே இரு தமிழ் இளைஞர் கைது!

கொழும்பு, மே 26

பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையின் கண்டி பூர்ணவத்த பகுதியில் அமைந்துள்ள வீட்டிற்கு அண்மையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியதாக தமிழ் இளைஞர்கள் இருவர் பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கலஹாவை சேர்ந்த டி. சற்குணபவன், கே. தம்பையா ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்கள்.

இவர்கள் இருவரும் பிரதி பாதுகாப்பு அமைச்சரின் நடமாட்டங்கள் குறித்து உளவறிய வந்தவர்களா என்பது குறித்து மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கட்டு நடவடிக்கைகள் பாதுகாப்பு பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ 5)

## பல்கலைக்கழக ஆசிரியர் போராட்டம் நிறுத்தம்

### உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி

கொழும்பு, மே 26

பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் தனது தொழிற்சங்க நடவடிக்கையை அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வரை நிறுத்தி வைத்துள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் பொதுச் செயலாளர் வி.ரி. தமிழ்மாறன் நேற்று இதனைத் தெரிவித்தார்.

சம்பள உயர்வு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் தொழிற்சங்க நடவடிக்கை எடுத்து வந்தது தெரிந்ததே.

இவர்களது தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்தால் ஓகஸ்ட் மாதம் நடைபெற இருந்த ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சை பாதிக்கப்படலாம் என்று அஞ்சப்பட்டது.

வினாத்தாள் தயாரிப்பதில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகர் கடலில் நேற்று மோதல்! சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம், மே 26

காரைநகர் கடற்படைத் தளத்தில் இருந்து வந்த ஸ்ரீலங்கா கடற் படைச் சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

காரைநகர் கடலில் நேற்றுப் பகல் கடற்படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலிலேயே கடற்படைச்சிப்பாய் கொல்லப்பட்டார்.

காரைநகர் கடலில் நடந்த மோதல் ஒன்றில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்பதை பாதுகாப்பு வட்டாரங்களும் ஊர்ஜிதம் செய்தன.

(ஒ-3)

## அகதிகள் திரும்பிச் செல்ல தயக்கம்

அச்சுவேலி வடக்கு, பத்தைமேனி பகுதியில் இம்மாதம் 18 ஆம் திகதி இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்தவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்ப அட்டையில் சரியான விவரம் பதிய கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 26

குடும்பப்பதிவு அட்டையில் சரியான விவரங்களைப் பதிவு செய்யுமாறு, போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் நடுவப் பணியகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக பிரஸ்தாப நடுவப் பணியகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்படுவதாவது:-

பொதுமக்கள் அனைவரும் தம்மிடம் உள்ள குடும்பப் பதிவு அட்டைகளில், குடும்பத் தலைவரின் முழுப் பெயர், வதிவிட முகவரி, குடும்ப உறுப்பினர்கள் பெயர்கள், பிறந்த திகதி, தொழில், தொழில் முகவரி என்பன சரியான முழுமையான விவரங்களைக் கொண்டிருப்பதை எதிர்வரும் ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் குடும்பத் தலைவரின் பெயர் முழுமையானதாக இருப்பதுடன், தற்போதைய வதிவிட முகவரி பூரணமாக பதியப்பட்டிருத்தல்வேண்டும்.

குடும்ப உறுப்பினர்கள் அனைவரினதும் பெயர்கள் முழுமையானதாகவும், பிறந்த திகதி, தொழில், தொழில் புரியும் இடம் என்பன கண்டிப்பாக பதியப்பட்டிருத்தல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 'ரெலோ' பிரதேச சபை உறுப்பினர் சுட்டுக்கொலை

கொழும்பு, மே 26

மட்டக்களப்பின் வாழைச்சேனை மற்றும் வாகரைப் பிரதேசங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை புலிகள் இயக்கத்தினர் 2 ரெலோ உறுப்பினர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். என்றும் —

இந்தத் தாக்குதலில் ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார் என்றும் கொழும்பு செய்தி தெரிவித்தன.

கொலையுண்டவர் வாழைச்சேனைப் பகுதி ரெலோ இயக்க முக்கியஸ்தரும் பிரதேச சபை உறுப்பினருமான சின்னத்தம்பி

## மொறட்டுவவில் நேற்று பஸ் விபத்தில் 14 பேர் பலி

மொறட்டுவ, மே 26

மொறட்டுவவில் நேற்று பிற்பகல் 2.15 மணியளவில் நடந்த பஸ் விபத்து ஒன்றில் 14 பேர் பலியாகினர் மேலும் பலர் படுகாயமடைந்தனர்

காயமடைந்த பலர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாத்தறையில் இருந்து கொழும்பு நோக்கி வந்த தனியார் பயணிகள் பஸ், வீதியில் நின்றவர்களை அடுத்தடுத்து மோதியபடி சென்றது அப்போது பலர் பஸ்ஸாக்குள் சி

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி ரோட் யாழ்

**A/L கலை பிரிவு 97**

புதிய பிரிவு ஆரம்பமாகிவிட்டன

காலை 8 மணி

பொருளியல்
திரு. லோகசிங்கம்
தமிழ்
திரு. குழந்தை
புவியியல்
திரு. குணராசா
இந்துசமயம் / நாகரீகம்
திரு. காரை சுந்தரம்பிள்ளை
அளவையியல்
திரு. விக்கி

★ மற்றைய பாடங்களும் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களினால் போதிக்கப்படுகிறது.

[சி/1424]



லயன் L. றேமன் முத்தையா
(District Chairman)
ஞாபகார்த்தமாக
பரியோவான் கல்லூரி லியோக் கழகம்
நடத்தும்

## இரசிகர்களின் அபிமான கிரிக்கட் நட்சத்திரம் தெரிவுப்போட்டி 1995

2 ஆம் சுற்று முடிவுகள்

| | | |
|---|---|---|
| சசிகரன் | K. H C. | 102 புள்ளிகள் |
| கேதீஸ்வரன் | ,, ,, | 85 புள்ளிகள் |
| தணிகேஸ்வரன் | ,, ,, | 30 புள்ளிகள் |
| சிறிக்குமார் | J. H. C. | 28 புள்ளிகள் |
| அமலன் | J C. C. | 26 புள்ளிகள் |

அன்பளிப்பு;
கணேசானந்தா பட்டுமாடம்,
15, சிறப்புஅங்காடி,
யாழ்ப்பாணம்

குகன் ஸ்ரோஸ்
190, (380) ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

[சி/1268)



## கண்ணீர் அஞ்சலி

**கா. சுந்தரலிங்கராசா**

[இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்]

எமது சங்க உபதலைவர் K.R ஜெயக்குமார் அவர்களின் மாமனார் கனடாவில் மறைந்த செய்தி கேட்டு ஆறாத்துயரில் இருக்கும் அன்னாரின் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

[இ.செ.சங்க] சாவகச்சேரி பிரிவு,
நிர்வாகிகள், உறுப்பினர்கள், தொண்டர்கள்,.

சி/1427



## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி கனகரட்ணம் கமலேஸ்வரி**

மலர்வு: 03-03-58
உதிர்வு: 18-05-93

திதி: 26-05-95

பாசமுடன் எங்களுடன் வாழ்ந்த நீங்கள்
பாதியிலே எமைவிட்டுப் பிரிந்ததேனோ
ஆசையுடன் உங்கள் முகம் பார்ப்பதற்கு
அழுதழுது ஆவலுடன் ஏங்குன்றோம்.

பிரிவால் துயருறும்
அன்புக் கணவன், பிள்ளைகள்,
சகோதரர்கள்

கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி.

[36807]


# கோமாரி கப்பல் தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டது

## தனியார் பொருள்கள் 'குமண'வில் வரும்

யாழ்ப்பாணம், மே 26
''கோமாரி'' கப்பலின் வடபகுதி சேவை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தனியாருக்கான பொருள்களை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறைக்கு சென்ற 17ஆம் திகதி வந்திருந்த இக்கப்பல் நேற்றுடன் பொருள்கள் முழுவதையும் இறக்கிமுடித்துவிட்டு கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

''குமண'' கப்பலில் தனியாருக்கான பொருள்கள் எடுத்து வருவதற்குப் போதியளவு இடவசதி இருப்பதனால் 'கோமாரி' கப்பலின் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

'குமண' கப்பலில் தனியாருக்கான பொருள்கள் ஏற்றும் வேலைகள் தற்போது கொழும்புத் துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

## அடுத்த ஆண்டு முதல் அரச சேவையில் சேருவோருக்கு

# ஓய்வூதியம் வழங்குவதை நிறுத்த அரசுக்கு யோசனை தெரிவிப்பு

கொழும்பு, மே. 26
1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து அரச சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் ஊழியர்களுக்கு, அவர்கள் இளைப்பாறிய பின் வழங்கப்பட வேண்டிய மாதாந்த ஓய்வூதியத்தை நிறுத்தி விடுவதான யோசனை ஒன்று அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

அரசின் அதிகரித்து வரும் செலவினங்களை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

தேசியப்பட்டியல் எம்.பி.யான திரு. ரவி கருணநாயக்கவின் இந்த யோசனை விவாதத்திற்காக நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதிக்கு பின் அரச சேவையில் சேர்க்கப்படுவோருக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்குவதை விடுத்து, அதற்குப் பதிலாக ஊழியர் சேமலாப நிதியில் இருந்து கொடுப்பனவுகளை வழங்கும்படியும் இந்த யோசனைத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் 01-01-96 இல் பத்து ஆண்டு கால சேவையைப் பூர்த்தி செய்யாத அரச ஊழியர்கள், ஓய்வூதியக் கொடுப்பனவு அல்லது, ஊழியர் சேமலாப நிதி கொடுப்பனவு ஆகிய இரண்டில் ஒன்றை தெரிவு செய்யும் விதத்தில், தற்போதுள்ள விதிமுறைகளில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் எனவும் ரவி கருணநாயக்கா கேட்டுக் கொண்டுள்ளார்.

[ஐ-5-10]

# வடக்கு கிழக்கில் பணிபுரிய பின்னடிக்கும் பொலீஸார்!

கொழும்பு மே, 26
வடக்கு,— கிழக்கில் பணியாற்ற பணிக்கப்பட்ட பொலிஸாரில் பலர் தமது இடமாற்றங்களை அரசியல் கட்சியினரின் செல்வாக்குகளைப் பாவித்து ரத்துச் செய்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க பயந்தே பொலிஸார் வடக்கு, கிழக்கிலும் எல்லைப் புறங்களிலும் பணியாற்ற மறுத்து வருகின்றனர் என அறிய வருகிறது.

இதனால் பொலிஸார் ஒவ்வொருவரும் கட்டாயமாக 6 மாத காலம் வடக்கு,—கிழக்கில் பணியாற்ற வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளது.

## ஆலயங்களில்

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தேர்த்திருவிழா ஜூன் 11 ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா 12 ஆம் திகதியும் நடைபெறும்.

காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் திரு த. சிவகுமாரன் உற்சவதினங்களின் 10 ஆம் திகதி வரை இரவு 8 மணிமுதல் ''தேவி மகாத்மியம்'' எனும் பொருளில் உரை நிகழ்த்துவார். (க)

★ ★ ★

புங்கன்குளம் வில்வையடி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

காலை 6 மணி முதல் விசேட அபிஷேகமும் இரவு பொங்கலும் தீக்குளிப்பு என்பனவும் இடம்பெறும்.

(ஐ-5-100)

★ ★ ★

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது

காலையில் மகா சங்காபிஷேகம், பகல் அன்னதானம், மற்றும் திரு. ஆறு.திருமுருகனின் தெய்வீகச் சிறப்புரை ஆகியன இடம்பெற உள்ளன. [5-152]

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 26
இருபாலை கற்பகப் பிள்ளையார் தேவஸ்தான மஹோற்சவம் இன்று வெள்ளி முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினாறு நாட்கள் நடைபெறும்.

எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 10 ஆம் திகதி தீர்த்தமும் 11 ஆம் திகதி வசந்தோற்சவமும் இடம்பெறும். [ஐ-5]

## பாடசாலைகளில்

கெற்பலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 2-30 மணிக்கு அதிபர் ச. சின்னராசா தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்விக்கோட்ட உதவிப் பணிப்பாளர் யோ. யோன்பிள்ளை கலந்து கொள்வார். [ஐ-117]

## மாணவர் எழுச்சிநாள் கலந்துரையாடல்

எதிர் வரும் ஜூன் 6 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள மாணவர் எழுச்சி நாள் பற்றிய கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளி காலை 10 மணிக்கு யாழ் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பர்நோ. கூ. சங்கங்கள் சனசமூக நிலையங்கள், வர்த்தக. சங்கம், விளையாட்டுக் கழகங்கள், ஆசிரியர்சங்கம், கடற்றொழிலாளர் சங்கங்கள் பேக்கரி உரிமையாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம் ஆகியவற்றின் தலைவர், செயலாளர்களையும் மற்றும் வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் அறிவித்துள்ளது. (ஐ-5)

## புலிகளின் குரல் வானொலியில்

26 - 05 - 1995

**வெள்ளி இரவு**

★ 8-02 — கலைமஞ்சரி அறிமுகம் — ''உலக உலா சஞ்சிகையின் மே மாதம் இதழ்'' ''சட்டத்தின் திறவுகோல்'' சஞ்சிகையின் முதல் இதழ். சிறுகதை — செல்வி. சோ. வசந்த பிறேமினி எழுதிய - ''வீரம் பிறக்கின்றது'' கவிதை — வானொலிச 4 இல் 3 ஆவது பரிசு பெற்ற நிலா தமிழின் தாசன் எழுதிய ''தாய சுந்தை நேசி''
★ 8-25 — கணப்பொழுது சி. கண்ணம்மா எழுதிய ''மேஜர் இளங்கோ''
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம் வே. பாலகுமாரன் எழுதிய 'இயற்கை விதிக்கும் மரண தண்டனை'
★ 8-50 — ஏர்முனை 'சிறு தானியம் செய்வோம்' குறுநாடகம்

27 — 05 — 1995

**சனி காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

**வெள்ளி மாலை**

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 புதியவை
★ 5-15 — கணநேரக்காவியங்கள்
★ 5-30 — மண்ணின்குரல்
★ 5-40 — நேயர் கடிதங்கள்
★ 5-45 — வெற்றிச்சுவடுகள்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — நாடகம் 'பொம்பிளை பார்க்கப் போறம்' அங்கம் 3
★ 6-25 — என் தெரிவு


யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்
(வண்ணை சிவன் கோயில்)

## ஏகதின இலட்சார்ச்சனை விஞ்ஞாபனம்

காலம்: 28 - 05 - 1995 ஞாயிற்றுக்கிழமை
காலை 6 மணி முதல் மாலை 2 மணிவரை இலட்சார்ச்சனை 2 மணிக்கு சங்காபிசேகம் மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை ஆகி, சுவாமி வெளிவீதி உலா மாலை 6 மணிக்கு

சிறப்புச் சொற்பொழிவு

பொருள்: ''பேசுவதால் பயனில்லை''

சொற்பெருக்காற்றுபவர்: இ. ஜெயராஜ் அவர்கள்
(அகில இலங்கைக் கம்பன் கழகம்)

[illegible] தர்மகுலசிங்கம்

[சி-1260]


மட்டக்களப்பு மீனவர்கள்

# படகுகளில் பதிவு இலக்கம் பொறிக்குமாறு உத்தரவு

கொழும்பு, மே 26
மட்டக்களப்பில் மீனவர்கள் தமது படகுகளை கடற்றொழில் அமைச்சில் பதிவு செய்து, பதிவு இலக்கங்களை படகின் இரு மருங்கிலும் மிகத் தெளிவாக பொறிக்க வேண்டும் என, மட்டக்களப்பு மாவட்டபாதுகாப்பு இணைப்பதிகாரி பிரிகேடியர் கே. பி. எகொடவெல பணித்துள்ளார்.

பதிவு இலக்கம் அற்ற எந்த ஒரு படகும் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-5)

## நூல்கள் இன்று அன்பளிப்பு

தென்மராட்சி, மே 26
பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினர் சாவகச்சேரி மட்டுவில் மகாவித்தியாலய நூல் நிலையத்திற்கான புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

புத்தகத் தொகுதிகளை சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா வித்தியாலய அதிபர் திரு. மு பாலசுப்பிரமணியத்திடம் கையளிப்பார். (ஐ 117)

## விளையாட்டு

தென்மராட்சி, மே 26
சரசாலை சரஸ்வதி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு த. நடேசபிள்ளை தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்விக் கோட்ட பிரதிப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் கலந்து கொள்வார். (ஐ-117)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், மே 26
வண் ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம், புங்குடுதீவு ஸ்ரீ பராசக்தி வித்தியாலயம் ஆகியவற்றின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-30 மணி முதல் வண். ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய மைதானத்தில் அதிபர் க.செல்வநாயகம்தலைமையில் நடைபெறும்.

நல்லூர்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.இ. அருளானந்தம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (க)

## சென்ஜோன்ஸ் பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம் மே 26
சென். ஜோன்ஸ் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை காலை 9-30மணிக்கு பிற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம அதிதிகளாக யாழ்ப்பாணம் தனியார் வைத்தியசாலைகள் மருத்துவ அதிபேட்சகர் வைத்தியகலாநிதி வி. ஜெயகுலராஜாவும் திருமதி கிறிஸ்டினா ஞானதிலகராணி ஜெயகுலராஜாவும் கலந்து கொள்வர். (க)

## கருத்தரங்கு

''அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்தலும் அனர்த்தங்களின் போது நிவாரணம் வழங்கலும்'' எனும் பொருளிலான கருத்தரங்கு ஒன்று நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைமையகத்தில் நடைபெறும்.

செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுகளின் தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்து கொள்வார்கள். (க)

## வளர்ப்பு நாய் விசர் நோய் தடுப்பூசி

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்துகள் அடுத்த மாதம் [ஜூன்] பின்வரும் இடங்களில் ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் 6 ஆம்திகதி மிருசுவில் கரம்பகம் சனசமூக நிலையதிலும், 7 ஆம் திகதிகைதடி மறவன்புலோ சனசமூக நிலையத்திலும், 14 ஆம் திகதி சரசாலை சனசமூக நிலையங்களிலும், 20 ஆம் கல்வயல் பாரதி சனசமூக நிலையத்திலும், 29 ஆம் திகதி மட்டுவில் சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)


அனுமதி மறுக்கப்பட்ட மாணவர்களுக்கான

# A/L 97

[புதிய பிரிவு 3]

**ஆரம்பம் 29-05-95**

திங்கள் மாலை 4 மணி
திங்கள், வெள்ளி நாட்களில்

★ புவியியல்:- திரு குணராஜா
★ தமிழ்:- திரு. குழந்தை
★ இந்து நாகரிகம்:- திருமதி அருள்நங்கை

இப்புதிய பிரிவிற்கான ஏனைய பாடங்களை எடுக்க விரும்பின் சனி - ஞாயிறு தினங்களில் அவ்வகுப்புக்கள் நடைபெறும்.

புதிய உயர் கல்லூரி
(New College Of Higher Studies)
ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம்

(சி/1423)



பட்டப் படிப்புக்கள் கல்லூரி

## B. A. மாணவர் சந்திப்பு

1994 ஏப்பிரல் பேராதனைப் பல்கலைக்கழக B. A. பரீட்சையில் சித்தியடைந்த எமது கல்லூரி சக மாணவர்கள் 27 - 5 - 95 சனி காலை 9 மணிக்கு கல்லூரியில் கூடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மாணவர் ஒன்றியம்

[36805]



## நன்றி கூறல்

25-4-95 இல் இறைவனடி சேர்ந்த எமது தாயாரின் இறுதிக்கிரியையிலும், 31 ஆம் நாள் நினைவஞ்சலியிலும் கலந்துகொண்டு சிறப்பித்த உற்றார், உறவினர், நண்பர்கள், யாழ். பலநோக்கு கூட்டுறவுச்சங்க, தபால் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நா. சிற்றம்பலம்
நா. தியாகலிங்கம்
(பிள்ளைகள்)

[36806]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்கன்குளம்
# வில்வையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்
# வருடாந்த பொங்கல் விழா சிறப்பிதழ்



## தெய்வீக நிலையில் மிக மேலோங்கிய பதியில் ஆரவாரமின்றி அமைதியான அருளாட்சி

எங்கள் உள்ளம் ஆளுகின்ற ஆற்றல்மிகு தாயே
எங்கும் மங்கலங்கள் சூழ்ந்திருக்கும் நாகபுரத் தாயே
எங்கும் வெந்தணலைக் குளிரவைக்கும் அதிசயத் தாயே
தினம் எங்களுக்காய் ஆடுகின்ற ஏற்றமிகு தாயே
பொங்கும் புகழிருக்கும் புங்கன்குளத் தாயே
நாங்களுன்னைப் பாடிடுவோம் பார்வதியே தாயே
நாழுமெனத் தேடிவந்து நாகமகள் தாயே
நல்ல வில்வை மரத்தடி அருள்வீர் நாகபூஷணித் தாயே

பக்திப் பெருக்கும் தெய்வீக அம்சங்களும் நிறைந்து விளங்கும் பல ஆலயங்கள் யாழ். குடாநாட்டிற்கு பல பாகங்களிலும் திலகமிட்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். நாட்டின் அமைதியற்ற சூழ்நிலைகள் காரணமாக பல திருத்தலங்களின் திருவிழாக்களும் பூசைகளும் வேறு வேறு இடங்களில் நடைபெறுவதும் அடியார்களின் நேர்த்திக்கடன்கள் வேறு வேறு ஆலயங்களில் நிறைவேற்றப்படுவதும் நம் பிரதேச வழக்கமாகிவிட்டது.

இந்த வகையிலே யாழ். குடாநாட்டின் புங்கன்குளம் பகுதியில் தோன்றி அருள் பாலிக்கும் அம்மன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருளாட்சியேயாகும். ஆனால் இவ்வம்மனின் புங்கன்குள அருள் தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்ட தொன்றன்று. இற்றைக்கு சுமார் இருபத்தொன்பது வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட்பார்வை இவ்விடத்திலே தோன்றியிருப்பதை அடியார்கள் அறிந்து கொள்வார்கள்.

ஆழகிய பெரும் தெரு. அதனை அண்டியிருக்கும் ஓர் புனிதமான குச்சொழுங்கை அறிவும், ஆற்றலும் தெய்வீகமும் நிரம்பியிருக்கும் மக்கள் சூழ்ந்த அயல். இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும் அற்புத மரத்தோப்புக்கள் இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்திருக்கிறது அம்மனுக்கு பிடித்தமான ஓர் வில்வமரம்; இந்த மரத்தின் அடியிலே தான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று.

அக்காலத்தில் இந்த வளவுக்குள் குடியிருந்த அடியவர்கள் அம்மனின் அருளையும் அருள் தோற்றத்தையும் அற்புதங்களையும் பல தடவைகள் கண்டுவியந்து தெய்வீக மேலீட்டினால் அந்த இடத்திலே சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆதரிக்க முற்படலாயினர். காலப்போக்கிலே அயலவர்களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம்பாள் அடியார்களாயினர்.

யாழ். நகரிலே புங்கன்குளம் பகுதியிலே வில்வை மரத்தடியிலே அம்பாளின் வதிவிடம் மிகச் சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களினால் இவ்வாலயம் தெய்வீக நிலையினால் மிக மிக மேலோங்கியுள்ளது குறிப்பிடத்தக்க விடயம்.

இவ் ஆலயத்திற்குள் பிரவேசித்ததும் அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிவச நிலை, அம்பாளை தரிசிக்க வரும்போது காணக்கூடிய அற்புதக் காட்சிகள்; அம்பாளுக்கு பூசைக்காக அடியார்கள் கொண்டுவந்து வைக்கின்ற பால், பழங்கள், மலர்கள் மறைந்து விடுகின்ற தன்மை; அடியார்களின் நடமாட்டம் இல்லாதபோது இங்கே நடக்கின்றதோர் இனந்தெரியாத தெய்வீக நடமாட்டம்; அம்பாளுக்கு செய்கின்ற நேர்த்திக்கடன்களினால் நோய் பிணி தோஷங்கள் நீங்கிவிடும் தன்மை; அத்தன்மைக்கும் மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக்குளம்பின் மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இவ் ஆலயத்திலே விரும்பி உறைகின்ற தன்மையை வெளிப்படுத்துகின்றன.

அம்பாளின் வருடாந்த பொங்கல் தினம் இன்று வெள்ளிக்கிழமையாகும். அடியார்கள் அனைவரும் யாழ். நகரின் புங்கன்குளம் பகுதியிலே வில்வையடியிலே அமர்ந்து அருள்பாலிக்கும் நயினை நாகபூஷணி அம்பாளின் அருட் பெரும் தோற்றத்தை அணுகி பேரருள்பெற்று உய்வார்களாக "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்".

★

### அருள்புரிவாய் அடிசரண்தாயி!

புத்தழகி பூவழகி புங்கன்குளக்காரி
எங்கும் பொங்கு கடல் சூழ்ந்த நல்ல நாகபுரத்தாயி
வித்தகி நீ விரதகி நீ வேப்பமரக்காரி
எங்கும் வெவ்வினைகள் வேரறுக்கும் வில்வமரத்தாயி
வேத்திலையின் மேல் நடக்கும் வெள்ளை பனக்காரி
எங்கும் வெந்தணலைக் குளிரவைக்கும் அதிசயத்தாயி
அத்தையும் நீ அம்மையும் நீ அருளுமக்காரி
அம்மா வந்தெமக்கு அருள் புரிவாய் அடிசரண்தாயி!

அம்பாளின் திருவருளை இறைஞ்சுகிறோம்

துர்ஷீனி
இன்சுவை உணவகம்

★ ஸ்பெஷல் புரியாணி
★ தித்திக்கும் ஐஸ்கிறீம்
★ குளிர்பானம்
★ சிற்றுண்டி வகைகளையும்
★ சுவை மிகுந்த மிக்ஸர்களும்

எந்நேரமும் பெற்றுக்கொள்ள;

352, லெப் இளங்கோ தெரு,
(மணிக்கூட்டு வீதி)
யாழ்ப்பாணம்.

அருள் சுரக்கும் புதுமைஅன்னை அருள் வேண்டுவோர்

★ ஒளிச்சுடர் வீடும்
பளிச்சிடும் நகைகளுக்கு .....

★ சானுகா நகைமாடம் ★
198 H. சந்தோசம் தெரு, யாழ்ப்பாணம்.

★ தங்க நிறமென்றாலே தனி மௌசுதான்.
அதிலும் 'சிறி நதியா'வின் நகைகளை
அணிந்த பெண்ணுக்கு எவ்வளவு பெருமை

★ சிறி நதியா நகை மாடம் ★
2G, அர்ச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.

★ நித்தம், நித்தம் புத்தம் புதிய டிசைன நகைகளை
அறிமுகப்படுத்துபவர்கள்

★ சிறி அமலா நகை மாடம் ★
74/1. சந்தோசம் தெரு, யாழ்ப்பாணம்.

O காலத்தின் தேவைக்கேற்ப நவநவமான டிசைன் நகைகளை
மங்கையர் மனங்களில் ரீங்காரம் செய்யும் வகையில்
செய்து தருபவர்கள்

< சோபனா நகைமாடம் >
சந்தோசம் தெரு, யாழ்ப்பாணம்.

O அவசர தேவையுணர்ந்து
ஓடர்களை உடனுக்குடன் செய்து பெற்றிட

நந்தினி நகைமாடம்
218H, சந்தோசம் தெரு, யாழ்ப்பாணம்.

O நவீன மிக்சர் கமரா மூலம்
அதி நுட்பமான முறையில்
நிகழ்ச்சிகளை தயாரித்து
விழாவினை மென்மேலும்
மெருகூட்டுபவர்கள்

O பழைய புதிய படப் பாடல்களை
DISCஒலியிழையிலிருந்து
நேரடியாக
Stereoவில் பதிவு செய்து
பெற்றிட

ரவி ஒளிகானம்
('சுப்ப ஸோ' வீடியோ)
100A, அர்ச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.

முருகன் வணிக நிலையம்
(முருகன் றேடஸ்)
295, இளங்கோ தெரு, யாழ்ப்பாணம்.
(மணிக்கூட்டு வீதி)

யோ. சிவா
இல. 70 — 72 பழக்கடை, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
எல்லா வகையான பழங்களும் பெற்றுக் கொள்ளலாம்.

விளம்பர இல: சி-1266

### உலக்கையால் அடித்து கொலை

வடமராட்சி, மே 26

துன்னாலை மத்தி மித்தில் கரையைச் சேர்ந்த சந்திரசேகரம் வல்லிபுரம் (70 வயது) என்ற வயோதிபர் உலக்கையால் தாக்கப்பட்டு மரணமானார்.

உடுப்பிட்டி மாணவி சாரணை அதிகாரி திரு. வி நடராசா விசாரணை நடத்தி இவரது மரணத்தை கொலை எனத் தீர்ப்பளித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை காவல்துறையினர் சந்தேகத்தின் பேரில் கொலையுண்டவரின் மருமகனான குமரேசமூர்த்தி என்பவரைக் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

(ஒ-173)

பிரதேச செயலகங்களுக்கு

### உலர் உணவு முத்திரை விநியோக வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 26

இடம் பெயர்ந்தவர்களுக்கான மார்ச், ஏப்ரல், மே மாதங்களுக்கான உலர்உணவு முத்திரைகள் 'கோமாரி' கப்பலில் யாழ் செயலகத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

உலர் உணவு முத்திரைகளை பிரதேச செயலர்களுக்கு அனுப்பி வைக்கும் வேலைகள் தற்போது யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்தவர்களுக்கான அடுத்த கட்ட நிவாரண விநியோகம் புதிதாக வழங்கப்படும் உலர் உணவு முத்திரைகளிலேயே மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-4)

### குழாய்க்கிணறு

தென்மராட்சி, மே. 26

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிராமிய எழுச்சி உதயத் திட்டத்தின் கீழ் பளை செந்தில் நகர் குடியிருப்பில் ரூபா 40 ஆயிரம் செலவில் குழாய்க்கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

(ஒ-[illegible])

## இதுவரை 20 ஆயிரம் ஈழ அகதிகள் தாயகம் அனுப்பப்பட்டு விட்டனர்

### அகதிகள் மறுவாழ்வுத்துறை பிரமுகர் தகவல்

சென்னை, மே. 26

தமிழகத்தில் இருந்து இதுவரை 20 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார்கள்

அகதிகள்மறுவாழ்வுத்துறை ஆணையர் திரு கிருஷ்ணகாள் [illegible] யில் வைத்து செய்தியாளர்களி [illegible] டம் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது மேலும் சுமார் ஆயிரம் அகதிகள் தாயகம் திரும்ப விருப்பம்தெரிவித்துள்ளதாக தெரிவித்த அவர் இவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரமாக அதிகரித்த பின் எதிர்வரும் ஓகஸ்ட் அல்லது [illegible] ம்பர் மாதத்தில் [illegible] கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள் என்றார்.

மாநிலத்தில் நீலகிரி, தஞ்சாவூர், நாகபட்டினம், சென்னை ஆகிய மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 121 முகாம்களில் 14 ஆயிரத்து733 குடும்பங்களைச் சேர்ந்த 56 ஆயிரத்து 770 இலங்கைத் தமிழ் அகதிகள் இருக்கின்றனர் என்றும் அவர் சொன்னார்.

(ஒ-4)

### சாரணர் சங்க கூட்டம்

அச்சுவேலி, மே 26

பருத்தித்துறை மாவட்ட சாரணர் சங்கத்தின் கூட்டம் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஆ. சிவசாமி தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

வருடாந்தச் சாரணர் விழாவை செப்டம்பர் 5 ஆம் திகதி தொடக்கம் மூன்று தினங்கள் நடத்துவது—

சாரண ஆசிரியர்களுக்கான பயிற்சி அளிப்பது என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பருத்தித்துறை மாவட்ட ஆணையாளர் திரு. கோ. செல்வநாயகம், செயலாளர் திரு. எஸ். கணபதி பிள்ளை ஆகியோரும் கூட்டத்திற் கலந்து கொண்டு உரையாற்றினர்.

(க-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


விற்பனைக்கு

24 H. P. இங்கிலண்ட் பேற்றர் டீசல் எஞ்சின் விற்பனைக்கு உண்டு தொடர்பு: சேகர் குளிர் ஊற்று, இல. 273' காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (36768)

வாங்கலாம் விற்கலாம்

நாஷனல் RX றேடியோ கசற் செற்கள் 12'', 14'' கறுப்பு வெள்ளை தொலைக்காட்சிகள் நியாய விலையில் வாங்கவும் விற்கவும் எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்! வீனஸ் டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [வானவில் கூல்பார் அருகில் ஆரியகுளம் சந்தி.

(சி-1410)

மண்ணெய் விநியோகம

தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படவிருந்த மண்ணெண்ணெய் விநியோகம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. மாணவர் அவை, தொழில் நுட்பக் கல்லூரி. [36793]


## விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய்

தென்மராட்சி மே. 26

தமிழர் புனர்வாழ்வுக்கழக விவசாய நிலையத்தினர் பளைப்பகுதியில் உடையார் மோட்டு நிலப்பயிர்ச் செய்கையில் 215 பயனாளிகளுக்கு தலா 20 லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கி வருகின்றனர்.

இதேவேளை பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பளை வட்டப் பசுமை நிலையத்தினர் மேட்டுநிலச் செய்கையாளர்களுக்கு 15 லீற்றர் முதல் 30 லீற்றர் வரை மண்ணெண்ணெய் வழங்கி வருகின்றனர். (க-117)


யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

THE JAFFNA EDUCATION CENTRE

(சாந்தி சினிமா முன்பாக)

வருடம்: 4 — 10

G.C.E. O/L

Spoken English, Short - Hand, Typing

ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்: 26 — 05 — 1995

[8553] — நிர்வாகி.

தொழிற் பயிற்சிகள்

எங்கும் இலகுவாக தொழில் வாய்ப்பு பெறக்கூடிய முறையில் குறைந்த காலத்தில் பயிற்சிகள் பெற

ஓர் அரிய சந்தர்ப்பம்

★ நீவைண்டிங்;
மின் மோட்டார், மின்விசிறி, ரான்ஸ்போமர் மற்றும் மின்சார உபகரணங்கள் றீவைண்டிங் செய்தல் ஆரம்பத்தில் இருந்து பயிற்சி அளிக்கப்படும்.
காலம்: 4 மாதம்

★ றேடியோ, T.V., வீடியோ டெக் றிப்பெயறிங்
சகல இன றேடியோ, ரெலிவிஷன் வீடியோ டெக் தொழிற்பாடு, திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 5 மாதம்

★ தொழிற் பயிற்சிகளுக்கு சிறந்த செய்முறைப் பயிற்சி அளிக்கப்படும்.

வகுப்புக்கள் வார நாட்களிலும் சனி, ஞாயிறு நாட்களிலும் உண்டு.

குறிப்பிட்ட தொகை விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

புதிய வகுப்பு

ஆரம்பம்: 27 - 05 - 1995

9 a.m. சனி ஞாயிறு

விவரங்களுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St. Peter's Lane, Jaffna.

(சி-1413)


யாழ். மாவட்ட தேர்தல் வழக்கு:

# 363 நிலையங்களில் வாக்களிப்பு செல்லுபடியற்றதாக கணிக்கப்பட்டது

## முன்னாள் தேர்தல் ஆணையாளர் சாட்சியம்

கொழும்பு, மே 26

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாத 16 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் 363 நிலையங்களில் வாக்களிப்பு செல்லுபடியற்றதாகக் கணிக்கப்பட்டது

முன்னாள் தேர்தல் ஆணையாளரும் பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய செயலாளருமான திரு. சந்திரானந்த டி சில்வா யாழ்ப்பாணத் தேர்தல் முறையீட்டு விசாரணையில் சாட்சியம் அளிக்கையில் இவ்வாறு கூறினார்.

மேற்படி தேர்தலில் சுயேச்சைக் குழு இரண்டில் இருந்து 9 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபிக்கும் இந்த முறையீட்டு வழக்கு கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது.

82 வாக்களிப்பு நிலையங்களின் வாக்கு கணக்கிடப்பட்டது எனவும் ஒரு குறிப்பிட்ட நிலையத்தில் குறைந்தபட்சம் ஒரு வாக்குத்தானும் அளிக்கப்பட்டிருந்தால் அந்த நிலையத்தின் வாக்களிப்பு செல்லுபடியாகும் எனக் கணிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மானிப்பாய், கோப்பாய், உடுப்பிட்டி, சாவகச்சேரி, பருத்தித்துறை, நல்லூர், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகியன உட்பட்ட நிலையங்களில் வாக்களிப்பு செல்லுபடியற்றது எனத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் 2.32 சதவீத மாணவர்களே வாக்களித்தனர் எனவும் திரு சந்திரானந்த டி சில்வா கூறினார். (ஒ-)

# தமது இயலாமை குறித்து சந்திரிகாவிடம் டக்ளஸ்!

கொழும்பு, மே 26

நாடாளுமன்றத்தில் எமது கட்சிக்கு ஒன்பது உறுப்பினர்கள் இருந்தும், யாழ்ப்பாண மக்களுக்கு என்னால் ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கின்றது

— இவ்வாறு யாழ். மாவட்ட எம்பியும், ஈ.பி.டி.பி. தலைவருமான டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளை கடந்த வாரம் சந்திப்பதற்கு முதல் நாள் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை ஜனாதிபதி சந்திரிகா சந்தித்தார். இந்தச் சந்திப்பு அலரிமாளிகையில் இடம் பெற்றது.

இச்சந்திப்பின் போதே யாழ். மக்களுக்கு உதவ முடியாத தமது இயலாமை குறித்து ஜனாதிபதியிடம் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார்.

அரசாங்கத்தினருக்கும் படையினருக்கும் ஆதரவு நல்கி வரும் தமது கட்சி, தமது இந்த நிலைப்பாடு குறித்து மறுபரிசீலனை செய்ய விரும்புவதாக டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் கூறினார்.

அவசரப்பட்டு முடிவு எடுக்க வேண்டாம் என்று அவரிடம் ஜனாதிபதி உடனடியாகக் கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.

தாம் எந்த நேரமும் கொல்லப்படலாம் எனக் குறிப்பிட்ட தேவானந்தா அடுத்தடுத்து வந்த அரசுகளுக்காகச் செயற்பட்டு வந்தமைக்காகத் தமமை துரோகி என புலிகள் அடையாளமிட்டுள்ளனர் என்றும் —

''துரோகி'' என்ற பெயருடன் இறக்க தாம் விரும்பவில்லை என்றும் —

டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் கூறினார்.

வடபகுதி மக்கள் அரசாங்கத்தின் அறிவித்தல்களைக் கேட்பதற்கு வசதியாக வேனும் பற்றறிகள் மீதான தடையை அரசு விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும் அவர் சொன்னார். (உ)


தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை

அபிவிருத்திச் சங்கம்

மேற்படி சங்கத்தின் புனரமைப்புக் கூட்டம், வைத்தியசாலை தற்போது இயங்கும், மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை, ஜேக்சன் கட்டடத்தில் 27-05 95 சனிக்கிழமை பி.ப. 3-00 மணிக்கு நடைபெறும் சங்கத்தில் அங்கத்துவம் வகித்தோர் நலன்விரும்பிகள் தயவு செய்து இக் கூட்டத்திற்கு சமுகம் தரவும்.

ந. கனகரத்தினம்
செயலாளர்

(8555)

புதிய பெரடெனியா இன்ஸ்ரிரியூட்

கே. கே. எஸ். றோட், கொக்குவில்.

அநேக மாணவரின் வேண்டுகோளுக்கு இணங்க

[திவக, யாழ்நகர்,] புகழ் கணித ஆசிரியர்

சண் - வாமதேவன்

வியாழன் — 4—5.00 மணி

சனி — 12—1-00 மணி

[சி/1416)

உ

கற்பகன் துணை

தென்கோவை — இருபாலை

கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்

மஹோற்சவ விஞ்ஞாபனம்

கற்பகன் அடியார்களே!

26 — 05 — 1995 வெள்ளிக்கிழமை இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் விசேட அபிசேக பூசையும், உற்சவங்களும் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

★ அடியார்கள் யாவரும் இந் நிகழ்வுகளில் கலந்து எம்பெருமானின் அனுக்கிரகத்தைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

09 — 06 — 1995 வெள்ளி இரதோற்சவம்

10 — 06 — 1995 சனி தீர்த்தோற்சவம்

இங்ஙனம்

சு. பாலசுப்பிரமணிய தேசிகர்,
தி. பாஸ்கரமகாராசா ஐயர்,
மேற்படி ஆலய ஆதீன கர்த்தாக்களும்,
உரிமையாளர்களும்.

இருபாலை, கோப்பாய். [36792]

அறவழிப் போராட்டக் குழு

நல்வாய்ப்புச் சீட்டு குலுக்கல் முடிவுகள்

20 – 05 – 1995 இல் அறவழிச் செயலகத்தில் குலுக்கல் பார்க்கப்பட்ட நல்வாய்ப்புச் சீட்டுக்களின் முடிவுகள் வருமாறு:-

1 ஆம் பரிசு சீட்டு இல: 2932
2 ஆம் பரிசு சீட்டு இல: 8622
3 ஆம் பரிசு சீட்டு இல: 377

ஆறுதல் பரிசுகள்:

சீட்டு இல:

| | | | |
|---|---|---|---|
| 1. | 3226 | 6. | 7405 |
| 2. | 3920 | 7. | 3034 |
| 3. | 7420 | 8. | 3616 |
| 4. | 1608 | 9. | 7818 |
| 5. | 6749 | 10. | 7397 |

மேலே காட்டப்பட்ட சீட்டுக்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 10 - 06 – 1995 ஆம் திகதி சனி தினம் காலை 10 மணிக்கு அறவழி செயலகத்தில் வழங்கப்படும். பரிசில்களுக்கு உரித்துடையோர் தமது பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

நல்வாய்ப்புச் சீட்டுக்கள் விற்பனையில் ஆதரவு நல்கிய அனைவருக்கும் நிறுவனத்தின் நன்றிகள்.

அறவழிப் போராட்டக் குழு.

NVDAG

கண்டி சாலை, சாவகச்சேரி. [36794]


## மாணவர்களுக்கு பாராட்டு

வடமராட்சி, மே 26

மாசார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த. உயர்தர வகுப்புக்கு தகுதி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு வைபவம் பாடசாலை அதிபர் திரு. எஸ்.கே.சி. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு அம் மாணவர்களுக்கு பாராட்டுரை வழங்கினர்.

மாணவர்களுக்குப் பரிசுப் பொருள்களும் வழங்கப்பட்டன. (க-173)

## மலசல கூட புனரமைப்பு

சண்டிலிப்பாய், மே 26

வலிகாமம் மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவிலுள்ள, இடம் பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள மலசல கூடங்கள் தற்போது புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டுகளில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினாலும், ஜேர்மன் ஜனநாயக குடியரசினாலும், மனித முன்னேற்ற நடு நிலையத்தினாலும் இப் பிரிவிலுள்ள இடம் பெயர்ந்தோர் அகதி முகாம்களில் அமைத்துக் கொடுக்கப்பட்ட மலசல கூடங்களில், பழுதடைந்த நிலையிலுள்ள மலசல கூடங்களே இப்பொழுது திருத்தி அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது. (க-5-135)

## விவசாயிகளுக்கு காப்புறுதி பணம்

வலி மேற்கு மே 25

கடந்த வருட நெற் செய்கையின் போது பாதிக்கப்பட்டு பயிர் காப்புறுதி செய்த வலிகாமம் மேற்கு பிரதேச விவசாயிகள் 13 பேருக்கு நெல் காப்புறுதிப் பணமாக 22 ஆயிரத்து 50 ரூபா வழங்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட நெல் பயிர் பாதுகாப்புச்சபை மேற் கொண்டுள்ளது. (க-175)

## மருந்து விநியோகம்

மானிப்பாயில் செயற்பட்டு வரும் தெல்லிப்பளை மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கு இவ்வருட இரண்டாம் காலாண்டிற்கான மருந்து வகைகளில் ஒரு பகுதி மருந்துகளை யாழ். சுகாதார திணைக்கள மாவட்ட மருந்து விநியோக களஞ்சியப்பிரிவு அண்மையில் விநியோகித்துள்ளது.

இதனை அடுத்து இவ் வைத்தியசாலையில் நிலவிய மருந்துத் தட்டுப்பாடு ஓரளவு நீங்கியுள்ளது. ஏற்பு தடுப்பு ஊசி மருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன. (க-135)


உ

மல்லாகம் பெரியதம்பிரான் கோயில்

பெரும் பொங்கல் - தீக்குளிப்பு

விஞ்ஞாபனம்

நிகழ்ச்சிகள்

நாள் 20 — 05 — 95 சனி மாலை விளக்கு வைத்தல்

27 — 05 — 95 சனி இரவு 9 மணி மடைப்பண்டம் எடுத்தல்

28 — 05 — 95 ஞாயிறு காலை 6 மணி பெரும் பொங்கல்

நண்பகல் 12 மணி பூசை

பிற்பகல் 1 மணி தீக்குளிப்பு

★ அனைவரும் வருக அருள் பெறுக. ★

வ. அப்புத்துரை
(பெரிய தம்பிரான் உபாசகர்)

மல்லாகம். [36797]

காவலாளர் தேவை

வீட்டுக் காவலாளர்களாகப் பணி புரிவதற்கு ஆட்கள் தேவை. இத்தொழிலில் அனுபவம் உடையவர்கள் நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரில் வரவும்.

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


# கேள்விப் பத்திரங்கள் கோரல்

## கமநல சேவைகள் திணைக்களம்

### யாழ்ப்பாண மாவட்டம்

பிரமாண அடிப்படையிலான மூலதனத் திட்டம் / பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் / நடுத்தர முதலீட்டுத் திட்டம் — 1995

மேற்படி திட்டங்களின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள கீழ்க்காணும் சிறிய நீர்ப்பாசன திருத்த வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் யாழ். மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளர் அவர்களால் 1995-06-07 ஆம் திகதி பகல் 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கிடைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 1995 – 06 – 07 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள அலுவலகத்தில் திறக்கப்படும்.

பிரமாண அடிப்படையிலான மூலதனத் திட்டம்

| | வேலையின் பெயர் | பிரதேச செயலர் பிரிவு | மீளளிக்கப்படும் கேள்விப் பத்திர வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. | பொன்னாலைக் குளம் மேற்குப் பக்க வாய்க்கால் தடுப்புப் பலகை அமைத்தல் | சங்கானை | ரூ. 250/- |
| 02. | அராலி வடக்கு கொட்டனைக் குள வாய்க்கால் தடுப்புப் பலகை அமைத்தல் | சங்கானை | ரூ 250/- |
| 03. | அராலி மத்தி பெரிய குள வாய்க்கால் தடுப்புப் பலகை அமைத்தல் | சங்கானை | ரூ. 250/- |
| 04. | நாதன் கேணிக்குளம் ஆழமாக்குதல் | கோப்பாய் | ரூ. 250/- |
| 05. | புளியங்குளம் ஆழமாக்குதல் | கோப்பாய் | ரூ 250/- |
| 06. | வேலியன்குளம் ஆழமாக்குதல் | கோப்பாய் | ரூ 250/- |
| 07 | கேணிக்குளம் ஆழமாக்குதல் | கோப்பாய் | ரூ 250/- |
| 08. | செட்டிகேணிக்குளம் புனரமைத்தல் | சாவகச்சேரி | ரூ. 250/- |
| 09 | ஓடைக்குளம் புனரமைத்தல் | சண்டிலிப்பாய் | ரூ. 250/- |
| 10. | உடுப்பிட்டி கிராய் வாய்க்கால் திருத்தம் | கரவெட்டி | ரூ. 250/- |
| 11. | தாமரைக்குளம் திருத்தவேலை | மருதங்கேணி | ரூ. 250/- |
| 12. | கிழுவானைக்குளம் | தெல்லிப்பளை | ரூ. 250/- |
| | **பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம்** | | |
| 01. | சின்னக்குளம் ஆழமாக்கலும் துருசு திருத்தலும் | உடுவில் | ரூ. 250/- |
| 02. | அந்திராயன் வாய்க்கால் திருத்தம் | சங்கானை | ரூ. 250/- |
| | **நடுத்தர முதலீட்டுத் திட்டம்** | | |
| 01. | நரசிங்கன் குளம் | சங்கானை | ரூ. 250/- |
| 02. | அரிபாலை மேற்கு வாய்க்கால் | நல்லூர் | ரூ. 250/- |
| 03. | குமுக்கனை வாய்க்கால் | சாவகச்சேரி | ரூ. 250/- |

02. கேள்விப் பத்திரங்கள் 1995 06-06 ஆம் திகதி பிற்பகல் 2 மணி வரை ஒப்பந்தகாரராக பதிவு செய்து கொள்ளப்பட்ட அத்தாட்சியை நிரூபிக்குமிடத்தும், ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 25/- மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணமாக செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும், மீளளிப்பு வைப்புப் பணமாக மேலே காட்டப்பட்ட தொகையை இவ் அலுவலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் அத்தாட்சியாகக் காண்பிக்குமிடத்து வழங்கப்படும்.

03. மேலதிக விபரங்கள் தேவைப்படின், இவ் அலுவலகத்தில் வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

க. சுந்தரேசன்
உதவி ஆணையாளர்
கமநல சேவைகள் திணைக்களம்,
யாழ் மாவட்டம்.

கமநல சேவைகள் திணைக்களம்,
நல்லூர்.
யாழ்ப்பாணம்.
1995 - 05 - 23

(சி-1261)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## கோரப் பல் தெரிகிறது!

வடக்கு - கிழக்கு பிரதேசத்துக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கும் அரசின் உத்தேச அரசியல் தீர்வுத் திட்டத்துக்கு பௌத்த மத பீடங்கள் ஒரே குரலில் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்போவதாக அரசாங்கம் கூறுகிறதேயன்றி, தனது திட்டத்தை இன்னும் உத்தியோகபூர்வமாக வெளியிடவில்லை.

அரசின் தீர்வுத் திட்டத்தை வெளியிட்டால் சிங்கள மக்கள் அதற்கு எதிராகக் கிளர்ந்து குழப்பத்தை விளைவிப்பார்கள் என்று சந்திரிகா ஒரு முறை கூறியிருந்தார். அவ்வாறு செய்யுமாறு மறைமுகமாகத் தூண்டியிருந்தார்.

தமது அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து ஆராய்வதற்காக, பத்து நாள்களுக்கு முன்னர் கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் சிலவற்றைச் சந்தித்த போதுகூட, சந்திரிகா முழுமையான திட்டத்தை வெளியிடவில்லை. வெறும் மேலோட்டமாக மட்டும் ஒரு சில அம்சங்களைத் தொட்டுக் காட்டினார்.

சந்திரிகா தெரிவித்த விளக்கம் குறைந்த மேலோட்டமான தகவலை தென்னிலங்கைப் பத்திரிகைகள் பெரிதாகக் காட்டிச் செய்திகள் வெளியிட்டன. வடக்கு-கிழக்குக்கு கூடுதல் தன்னாட்சி அதிகாரம் வழங்கப்படும் என்ற எலும்புக் கூட்டுக்கு தசை, நரம்பு, இரத்தம் என்பன சேர்த்து சமஷ்டி முறைத் தீர்வு ஒன்றை அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக அவை விமர்சித்தன.

அது மட்டுமன்றி, சமஷ்டியை இப்போது வழங்குவது என்பது, பிரபாகரனுக்கும் அவரது இயக்கத்துக்கும் தனிநாட்டைத் தாம் பணத்தில் வைத்துக் கொடுப்பதற்குச் சமமானது என்று நஞ்சுகட்டின. குறிப்பாக 'ஐலண்ட்' பத்திரிகை ''அமைதிப் பொறி'' என்ற தலைப்பில் கருத்து விஷம் கலந்த ஆசிரியர் தலையங்கமும் தீட்டியிருந்தது.

இந்த விமர்சனங்களையும், கருத்துகளையும் படித்த பௌத்த குருமார்களின் அமைப்புகள் ''விட்டேனோ பார்'' என்று மீண்டும் கிளர்ந்து எழுந்துவிட்டன!

தமிழர்களுக்கு உரிய சலுகைகளை வழங்குவது என்பது பௌத்த குருமாருக்கு எப்போதுமே ஒவ்வாமையை ஏற்படுத்துவதாகும். முன்னரும் பல தடவைகள் தமிழர்களுக்கு சிறு சிறு உரிமைகளை அரசாங்கங்கள் வழங்க முன் வந்தபோதெல்லாம் பௌத்த குருமார்கள் இவ்வாறு எதிர்த்துத் தடுத்தது இந்நாட்டின் துரதிர்ஷ்ட வரலாறு ஆகும்.

இலங்கை சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தம். தமிழர்களுக்குத் தாயகம் என்று எதுவுமில்லை. தமிழர்களுக்கு சம உரிமைகள் வழங்க முடியாது. அவர்கள் தமக்குக் கிடைக்கும் சலுகைகளோடு திருப்திப்பட்டு இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழவேண்டும் என்பதே சிங்கள பௌத்த பேரினவாதத்தின் நிலையழியாக் கோட்பாடும் கொள்கையுமாகும்.

இந்தப் பேரினவாத நச்சு மரத்தின் மூலவேராகத் திகழ்பவர்கள் பௌத்த மத பீடத்தினரும், பௌத்த பிக்குகளுமே ஆவர். அவர்களது ஆதரவாளர்களும், அபிமானிகளும் காலத்துக்குக் காலம் வெவ்வேறு பெயர்களில், வடிவங்களில் செயற்படுவது வழமை.

இந்தப் பேரினவாதம் ஸ்ரீலங்காவில் ஒருபோதும் கருகிப்போக மாட்டாது; மாறாக இலை விட்டு படர்ந்து வளர்வதையே காணமுடிகிறது.

தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு கருத்து வெளிவருவது தான் தாமதம், இந்தக் கொடிய பேரினவாதம் தனது கூரிய கோரப் பற்களைக்காட்டி தமிழர்களைக் கடித்துக் குதறத் தொடங்கிவிடும். சுதந்திரத்துக்குப் பின்னர் இந்த நாட்டின் அரசியல் வரலாறு இப்படியே நீடிக்கிறது!

அதனாலேயே, தமிழர்கள் தமது உரிமைகளை ஆயுதம் ஏந்திப் போராடவேண்டிய தேவை ஏற்பட்டது. அந்தத் தேவை இத்தகைய தருணங்களில் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது.

# வெளியார் நடமாட்டம் குறித்து கண்டியில் தீவிர கண்காணிப்பு!

## சாதாரண உடையில் பொலிஸார் கடமையில்

கொழும்பு மே 26

கண்டி பொலிஸ் மாவட்டத்துக்குள் வரும் வெளியாட்களை கண்காணிக்கும் பொருட்டு பொலிஸார் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

கண்டி மாவட்ட வாசிகள், வெளிமாவட்டங்களை சேர்ந்தவர்களின் நடமாட்டங்கள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டும் என்றும்—

சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடுபவர்கள் பற்றி உடனடியாக அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கண்டி நகருக்குள் வரும் வாகனங்கள், நகரைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள ஆறு பொலிஸ் தடை நிலையங்களிலும் கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

சந்தேகத்திற்கிடமானவர்களை கண்காணிக்கும் பொருட்டு, சாதாரண உடையணிந்த பெருந்தொகையான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கண்டி நகரம் இரவு, பகல் எந்நேரத்திலும் மிகவும் விழிப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

[ஐ-5]

# செம்பியன்பற்று கரையில் தினமும் ஒதுங்கும் அரிசி!

தென்மராட்சி, மே 26

வடமராட்சி கிழக்கு கடற்கரைப் பகுதியில் பெருமளவு சோறா அரிசி கரை ஒதுங்கிய வண்ணம் உள்ளது. குடியிருப்புப் பிரதேசமான செம்பியன் பற்றில் இருந்து ஆழியவளை வரையான — சுமார் 10 மைல் நீளமான கரையில் கடந்த வியாழன் முதல் தினமும் அரிசி ஒதுங்கிய வண்ணம் உள்ளது.

கரை ஒதுங்கும் அரிசியை மக்கள் தினமும் அள்ளிச் செல்கின்றனர்.

தற்போது வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி முகாமுக்கு கடற்படைக் கப்பல்களிலிருந்து இறக்கப்படும் மூடைகளிலிருந்து கொட்டும் அரிசியாகவோ அல்லது முகாமில் இருந்து வீசப்பட்ட பழுதடைந்த அரிசியாகவோ இருக்கலாம் என நம்பப்படுகிறது.

தற்பொழுது கடலில் தரித்து நிற்கும் பாரிய கப்பலிலிருந்து தினமும் ஐந்து படகுகள் மூலம் வெற்றிலைக்கேணி முகாமுக்கு உணவுப் பொருள்கள் இறக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. [ஓ-117]

## அபிவிருத்தி கருத்தரங்கு

வலிகாமம், தெற்கு மே 26

சித்தன்கேணி ஜனசக்தி சனசமூக நிலையம், மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆதரவுடன் நடத்தும் அபிவிருத்தி சம்மந்தமான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரு. சி. சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் வலி. மேற்கு பிரதேச செயலர் திரு க. சந்திரராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன், விரிவுரையாளர் திரு. குமாரவேல் யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. இராசகோபால் நந்தகுமார் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். (ஐ 5-152)

# ஈழப் போரில் தலையிடுவது இந்தியாவுக்கு ஆபத்தாகும்!

## பாரதீய ஜனதாக்கட்சி எச்சரிக்கை

புதுடில்லி, மே 26

இலங்கையில் நடைபெற்று வரும் இனவாதப் போரில் தலையிடுவது இந்தியாவுக்கு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும். —இந்தியாவின் முக்கிய எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக்கட்சி இவ்வாறு இந்திய மத்திய அரசை எச்சரித்துள்ளது.

இந்தியாவையும், இலங்கையையும் பிரிக்கும் பாக்கு நீரிணை கடற்பிரதேசம் இராணுவக் கெடுபிடி உள்ள பகுதியாக மாறும் சாத்திய கூறுகள் தற்போது அதிகரித்துள்ளன இதனால் இந்தியாவின் பாதுகாப்புக்கு இலங்கை அச்சுறுத்தலாக அமையக் கூடும் —இவ்வாறு பாரதீய ஜனதாக் கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை—

ஈழத் தமிழர்களின் துன்பங்கள் நீங்கவும், அங்கு அமைதி நிலைக்கவும் ஏனையநாடுகள் அக்கறை காட்ட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் தெரிவித்துள்ளது.

சென்னையில் நேற்று முன் தினம் நடைபெற்ற கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் இவ்வாறு கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை அரசுக்கு இராணுவ உதவிகளை வழங்குவதன் மூலம் இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிடக்கூடாது என்று கோரும் தீர்மானமும் அங்கு எடுக்கப்பட்டது. (ஐ-5)

# மனிதர்கள் நான்கு வகை

மனிதர்களில் நான்கு வகையானவர்கள் இருக்கிறார்கள் என்று ஒரு பழங்கதை கூறுகிறது. அவர்கள் —

★ உண்டு, உண்டு பிரிவினர்.

★ இல்லை, இல்லை பிரிவினர்.

★ உண்டு, இல்லை பிரிவினர்.

★ இல்லை, உண்டு பிரிவினர்.

''உண்டு, உண்டு'' என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள், உழைத்துச் செல்வம் சேர்த்த வள்ளல்கள். அவர்களிடம் செல்வம் இருக்கிற காரணத்தால், இம்மையில் அடையக் கூடிய தார்மிகத்திற்குப் புறம்பில்லாத எல்லா சுகங்களையும் அடைகிறார்கள்.

அதே சமயம், தான தர்மம் செய்து வள்ளல்களாகவும் அவர்கள் இருப்பதால் அந்தப் புண்ணியத்தால் அவர்களுக்கு — சொர்க்கமும் கிடைக்கிறது.

எனவே இம்மை, மறுமை ஆகிய இரண்டு சுகங்களும் இவர்களுக்கு உண்டு.

''இல்லை, இல்லை'' என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள், செல்வமுள்ள கஞ்சப் பிரபுக்கள் அவர்களிடம் செல்வமிருப்பதும் கஞ்சத்தனமும் கூடவே இருப்பதால், இம்மை சுகங்களை அவர்கள் அடைவதில்லை. தான தர்மம் செய்யாததால், மறுமையிலும் அவர்களுக்கு உயர்ந்த நிலை கிட்டுவதில்லை. எனவே இம்மை, மறுமை ஆகிய இரண்டு சுகங்களும் இவர்களுக்கு இல்லை.

''உண்டு, இல்லை'' என்ற பிரிவினர் தாசிகள். எந்த தர்ம நியாயத்திற்கும் உட்படாமல் எல்லா உலக சுகங்களையும் அவர்கள் தேடி அடைகிறார்கள். ஆனால், அவர்கள் செய்வது பாவ காரியம் ஆகையால், மறுமையில் அவர்களுக்கு நற்கதி கிடைப்பதற்கு வழியே இல்லாமல் போய்விடுகிறது. மாறாக, நரகத்தில் துன்பம் அனுபவிக்க வேண்டிய கட்டாய நிலையும் அவர்களுக்கு ஏற்படுகிறது.

எனவே இந்த ''உண்டு, இல்லை'' பிரிவினருக்கு

| ஞானக்கதிர் |

இம்மை உண்டு; மறுமை இல்லை.

சந்நியாசிகளும் எளிய வாழ்க்கை நடத்தும் புண்ணியசீலர்களும் நான்காவதாகிய ''இல்லை, உண்டு'' என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இந்த உலக சுகபோகங்களைத் தாங்களாகவே விரும்பி நிராகரிக்கிறார்கள். ஆனால் தூய தவ வாழ்க்கையின் காரணமாக அவர்களுக்கு மறுமையில் முக்தி கிடைக்கிறது. இந்த ''இல்லை, உண்டு'' பிரிவினருக்கு இம்மை இல்லை; மறுமை உண்டு.

நன்றி:
ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

# கிழக்கு முஸ்லிம், சிங்கள மக்கள் ஆயுதம் வைத்திருக்க அனுமதிக்குக!

## ''ஐலண்ட்'' பத்திரிகைக்கு தென்பகுதி வாசகர் கடிதம்

கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் மக்களினதும் சிங்கள மக்களினதும் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க முடியாவிட்டால் அவர்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள ஆயுதங்கள் வைத்திருக்கவும், ஆயுதப் பயிற்சி பெறவும் அரசு அனுமதிக்க வேண்டும்.

தென்பகுதி வாசகர் ஒருவர் 'ஐலண்ட்' பத்திரிகைக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாண விவகாரம் மூன்று சமூகங்களையும் பாதிக்கும் ஒன்றாகும். அங்கு முஸ்லிம், சிங்கள மக்கள் சுமார் 65 சதவீதத்தினராக இருக்கின்றார்கள். இதில் 16 சதவீதம் குறையும் என்றால் தமிழ் மக்கள் அங்கு பெரும்பான்மையினர் ஆகிவிடுவர். இதுதான் தமிழீழ விடுதலைப் புலிகளின் நோக்கம் போலும்.

கிழக்கு மாகாண நிலைமை கட்டுக்கடங்காததாகி இந்த மாகாணம் ஆளமுடியாததாக வருவதற்கு முன்னர் அரசாங்கம் அது பற்றி உறுதியான தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று அவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ஐ-க)

## கோழிகளுக்கு தடுப்பூசி

வலிகாமம் தெற்கு, மே 26

கந்தரோடைப் பகுதியில் கோழிகளுக்கான நோய்த் தடுப்பூசி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை போடப்படவுள்ளது.

காலை 6-30 மணிக்கு கந்தரோடை ஞான வைரவர் ஆலயம் முன்பாகவும் —

காலை 7-30 மணிக்கு கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையிலும் —

காலை 8-00 மணிக்கு கந்தரோடை ஸ்ரீ சிவசுப்பிரமணிய வாசிகசாலையிலும் வைத்து, தெல்லிப்பழை கால்நடை வைத்தியர் பிரிவினால் கோழிகளுக்கு நோய்த்தடுப்பூசி போடப்படும்.

[ஐ-152]

# யுத்தம் தொடர்பான செய்திகளை வெளியிடுவதில் அரசு நம்பகத்தன்மையை கடைப்பிடிக்கவில்லை!

'சண்டே ஒப்சேவர்' பத்திரிகையில் வெளியான ''பாதுகாப்பு அறிக்கையில்'' தெரிவிக்கப்பட்ட தகவல்கள் இங்கு பிரசுரமாகுகின்றன.

பாதுகாப்புப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் மோதல்கள் வெடித்து இரண்டாவது மாதம் ஆரம்பமான நிலையில் —

அரசாங்கத்துடனான சமாதானப் பேச்சுக்களை மூன்றாவது முறையாக கடந்த ஏப்ரல் 19 ஆம் திகதி கிளர்ச்சியாளர்கள் முறித்துக் கொண்ட பின்னர்—

தற்போதைய சண்டைகளினால் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை 246 ஆக அதிகரித்திருக்கிறது.

கடந்த வாரம் வரை புலிகளின் உயிரிழப்பு எண்ணிக்கை 191 என இராணுவ அறிவிப்பு வெளியாகியுள்ள போதிலும்—

இதனை கடந்த வெள்ளியன்று தமது இரகசிய வானொலிச் சேவையில் மறுத்த கிளர்ச்சியாளர்கள், இந்த எண்ணிக்கை மிகமிகக் குறைவு என்றும் தெரிவித்துள்ளனர்.

அரசு பொய்யான தகவல்களை வெளியிடுவதாக வடபகுதி பொதுமக்களுக்கு அறிவித்த அவர்கள் —

பாதிக்கப்பட்ட கிளர்ச்சியாளர்களின் எண்ணிக்கை தொடர்பாக கடந்த ஆண்டுகளில் அரசுத்தரப்பு விடுத்த அறிவிப்புக்களைக் கூட்டிப் பார்த்தால் தங்கள் அமைப்பே இப்போது இருக்க முடியாது என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தற்போது வெளிவருகின்ற — எச்சரிக்கை பாணியிலான செய்திகள்— அவை வதந்திகளாக இருந்தாலும் கூட — பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொடுக்கப்படுவது சர்ச்சைக்குள்ளாகியுருக்கிறது.

இத்தகைய செய்திகளின் உண்மைத்தன்மை பாதுகாப்பு அதிகாரிகளினால் கேள்விக்கு உள்ளாக்கப்படாத நிலை—

போக்கைச் செய்திகளை வெளியிடும் அரசாங்க நிறுவனங்களைப் பொறுத்தவரை நம்பகத்தன்மை அவசியம் என்பதை தெளிவுபடுத்துகின்றன.

## வெளிநாட்டு அபிப்பிராயம் சாதகமாகும் வேளையில் உள்நாட்டு மக்களின் நம்பிக்கையை இழக்கிறதாம்

அதிகாரிகளின் எண்ணத்தைப் பொறுத்தவரை இத்தகைய செய்திகள் பொது மக்களின் பெரும்பகுதியைச் சந்தேகப்பட வைப்பதிற்கு உகந்தவை என்றாலும்—

உண்மை நிலை என்னவென்பது முன்னணிப் படைச் சிப்பாய்க்கு நன்கு தெரியும் என்பதனையும்—

அத்தகைய உண்மை நிலையை அச்சிப்பாய் தன்னுடைய [வீட்டுக்கு எழுதும் கடிதங்களில் குறிப்பிடுவதையும் — அந்தக் கடிதங்கள் தாமதமாகக் கிடைத்தாலும் கூட — அது அச்சிப்பாயின் குடும்ப] அங்கத்தவர்கள் மற்றும் நண்பர்களிடையே பரிமாறப்படுவதையும்—

அந்த அதிகாரிகள் கவனத்தில் எடுக்கத் [illegible] றனர்.

இத்தகைய குழப்பநிலை, அரசின் மீது நம்பகத்தன்மை இல்லாத நிலை ஏற்படுதற்கு இறுதியாக வழிவகுப்பதோடு அதன் பாதிப்பு சிப்பாய்களின் மீதும் சுமத்தப்பட ஏதுவாகி விடுகிறது.

நாட்டின் சரித்திரத்தில் தற்போதுள்ள மிக நெருக்கடியான காலகட்டத்தில் —

முன்னணிப்படைகளுக்கு விநியோகம் வழங்குவது எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு—

அரசுக்கும் மக்களுக்கும் இடையில் நம்பிக்கையைக் கட்டி வளர்ப்பதும் நம்பகத்தன்மையைப் பேணுவதும் [நாட்டின் பாதுகாப்பை விட்டுக் கொடுக்காமல்] மிக முக்கியமானவையாகும்.

நம்பகத்தன்மையை நிலைநாட்டும் முயற்சிக்கு முதல் நடவடிக்கையாக—

வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மூலம் பிரசாரம் செய்யப்படும் இத்தகைய ''வதந்திகளை'' உறுதிப்படுத்த அல்லது மறுக்க அரசு ஆரம்பிக்க வேண்டும்.

நம்பகத் தன்மை பற்றிய விவாதத்தில்— வேறு விதமான ஒரு முனையில்—

உயர் பதவிகளை வகித்த பல அதிகாரிகளை திடீரென இடம் மாற்றம் செய்ததை அடுத்து இராணுவ தலைமைப்பீடம் தனது சொந்த நம்பகத்தன்மையை அதிகாரிகளின் ஒரு பிரிவினரிடையே இழந்துள்ளது.

வடக்கு — கிழக்கின் பாதுகாப்பு பற்றிய உண்மை நிலை [illegible] கள் விமர்சனம் செய்ததற்காகவே இந்த இடமாற்றங்கள் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கும் முற்பக்கச் செய்திகள் வெளியானதை அடுத்து இந்த விடயம் பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் நிலை ஏற்பட்டது.

இந்த இடமாற்றங்களுக்கு பின்னணியாக உள்ள சாதக பாதகங்கள் எதுவாக இருப்பினும் —

பாதுகாப்புப் படையினருக்கு உள்ளே இடம்பெறும் பூசல்கள், இடமாற்றங்கள், துருப்புகளின் நகர்வுகள், படையினரின் ஆளணி எண்ணிக்கை பற்றிய விவரங்கள் மற்றும் ஏனைய தகவல்கள் பகிரங்கப்படுத்துவது அண்மையில் அதிகரித்திருப்பது — அவை பொதுமக்களுக்கு முக்கியத்துவம் குறைந்தவையாக இருந்த போதும் அதிலும் விட விடுதலைப் புலிகளுக்கு தகவல்களைத் தரும் ஒரு மூலமாக அமைந்திருப்பது — பாதுகாப்பு விடயங்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ள பலருக்கு அதிருப்தியைத் தந்திருக்கிறது.

ஆனால் அத்தகைய தகவல்களை வெகுஜனத் தொடர்பு சாதனங்களுக்கு வழங்குபவர்கள் இராணுவ அதிகாரிகளேயன்றி வேறு யாருமல்லர் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மறுபுறத்தில் —

யுத்தக் களத்தில் அனைத்தும் சரியாக இருக்கின்றது எனக் குறிப்பிட்டு அரசாங்கத்தை உயர்பீடம் தவறாக வழிநடத்துவதாகக் கூறப்படுவது உண்மையானால், வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மூலமாகவன்றி வேறு எந்த வழியில் உண்மை நிலையை வெளிக்காட்ட முடியும் என்று விலகி நிற்போர் கேள்வி எழுப்புகின்றனர்.

இந்த விடயம், தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒன்று என்பதோடு, அதிகாரிகள் அவசரமாக தமது கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதுமாகும்.

இதே வேளை —

வடக்கு யாழ்ப்பாணத்தில், 97 உயிர்களைப் பலிகொண்டு, இரண்டு விமானங்களை இழந்து ஒரு மாதமாகியும், அவற்றைச் சுட்டு வீழ்த்திய ஆயுதத்தின் வகை என்னவென்பதற்குப் பதில் தர வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட விமானப்படையோ, புலனாய்வு அமைப்புகளோ அதனை இன்னும் அடையாளம் காணவில்லை.

இரண்டு விமானங்களை இழந்த சம்பவம் வடக்குக்கு மட்டுமல்லாமல் கிழக்கிலும் சில பகுதிகளுக்கான விமான சேவையை முற்றாகக் குறைப்பதற்கு காரணமாகி விட்டது.

என்றாலும், வடக்கிற்கான விமான சேவையை கடந்த வாரம் விமானப்படை அதிகரித்ததன் மூலம் நிலைமை மெல்ல வழமைக்குத் திரும்புகிறது.

விமானத் தாக்குதல்களின் விளைவுகள் என்னவென்பது இனிமேல் தான் தெரியவரும் என்றாலும் —

இராணுவ வட்டாரங்களின் படி, தன்னுடைய பணியை எதிர்பார்க்கப்பட்டபடி விமானப்படை ஆற்ற வேண்டுமாயின் ஸ்ரீலங்கா விமானப் படையின் தேவைகள் குறித்து அரசு தீவிர அக்கறை காட்ட வேண்டும்.

இடமாற்றம் செய்வது, பின்னணியிலிருந்து உதவுவது, இலக்குகளைத் தாக்குவது போன்ற தரைப்படையின் தேவைகளை விமானப்படை நிறைவேற்றக் கூடியதாக — செயல்திறன் மிக்க — விமானமே தேவைப்படுகின்றது என்கின்றனர் அதிகாரிகள்.

இதற்கு ஏவுகணை எதிர்ப்பு செயல்திறன் கொண்ட இராணுவ போக்குவரத்து விமானங்கள், ஹெலிக் கொப்டர்கள், இடைத்தூர தாக்குதல் விமானங்கள் போன்றவையே தேவைப்படுவதாக அதிகாரிகள் விளக்குகின்றனர்.

ஸ்ரீலங்கா விமானப் படையின் அச்சொட்டான தேவை குறித்து சிரேஷ்ட அதிகாரிகளுக்கு நன்கு தெரியும் என்றாலும்] —

ஆயுத விற்பனை முகவர்களிடம் லஞ்சம் பெறுவதாக தங்கள் மீது குற்றம் சுமத்தப்படலாம் என்ற காரணத்தினால், சில பொருள்களைப் பெயர் குறிப்பிட்டு சிபாரிசு செய்வதற்கு அவர்கள் தயங்குவதாகத் தெரியவருகின்றது.

''இத்தகைய முக்கியமான தாக சூழ்நிலை இருக்க, பெறுமதியான நேரம் வீணாகிக் கொண்டிருக்கிறது'' — என்று குறிப்பிட்ட பாதுகாப்பு ஆய்வாளர் ஒருவர் —

சர்வதேச அபிப்பிராயம் ஸ்ரீலங்காவுக்குச் சாதகமாகத் திரும்பிக் கொண்டிருக்க, உள்நாட்டில் நிலைமை அதற்கு மாறாகப் போய்க் கொண்டிருக்கிறது என்று மேலும் கூறினார்.

(உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்த பாதுகாப்புச் செலவை ஈடுசெய்ய புதிய வருமான ஏற்பாடு

## அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு, மே 26

அதிகரித்த பாதுகாப்புச் செலவை சமாளிக்கப் புதிய வருமான நடவடிக்கைகளை அரசு நடைமுறைப்படுத்த உள்ளது.

பிரதிநிதி அமைச்சரும், அரசமைப்பு விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட ஆலோசனைகளில், வெளியிடப்பட்ட பாதுகாப்பு செலவினத்தில் 300 கோடி ரூபாவை குறைப்பது என்ற தீர்மானம் ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெற்ற நிலைமைகளைப் பொறுத்தவரையில் பொருத்தமற்றதாக இருக்கிறது — என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

1995 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு செலவினத்தை 2 ஆயிரத்து 472 கோடி ரூபாவாக அரசு மதிப்பிட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 2 ஆயிரத்து 700 கோடி ரூபாவிலும் பார்க்க இம்முறை குறைந்துள்ளது.

நாட்டின் நிலைமை பெருமளவு மாற்றம் அடைந்துள்ளதால் பாதுகாப்பு செலவினத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே மதிப்பிட்ட வரவு - செலவுத் திட்டத் தொகைகள் இப்போது பொருந்துவதாக இல்லை. எனினும் நோட்டுகளை கூடுதலாக அச்சிடவோ, கடன் பெறவோ அரசு முயற்சி செய்யமாட்டாது.

பணவீக்க அழுத்தங்களை ஏற்படுத்தாமல் அதிகரித்த பாதுகாப்பு செலவை ஈடுசெய்வதற்கான தெளிவான திட்டம் ஒன்றை அரசு தயாரித்துள்ளது. — என்றார் அமைச்சர்.

பொது அறிவை அடிப்படையாகக் கொண்ட இலகுவான நடைமுறைகளையே அரசு கடைப்பிடிக்கப்போவதாக தெரிவித்த அமைச்சர் அதுபற்றிய விவரங்களை வெளியிட மறுத்துவிட்டார். (அ-3)


யாழ்.
றோட்டறிக் கழகம்

எமது கழகத்தின் ஆதரவில் கோப்பாய்/ சங்கானை அரசினர் வைத்தியசாலைகளில் நடைபெற்ற கண் சத்திர சிகிச்சை முகாம்களில் ''கற்றக்'' சத்திர சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு கண்ணாடிகள் வழங்கப்படவிருக்கின்றன. தேவைப்படுவோர் 1995 மே 31 இன் முன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்.
யாழ். றோட்டறிக் கழகம்

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். [சி-1252]


## மரண அறிவித்தல்கள்

### தம்பி பஞ்சாட்சரம சிவராசா
[Retd R. M. P.]

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த தம்பி பஞ்சாட்சரம் - சிவராசா அவர்கள் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பி பஞ்சாட்சரம் தம்பதியின் மகனும், காலஞ்சென்ற டாக்டர் கனகரத்தினம் தம்பதியின் மருமகனும், சிவநாயகியின் அன்புக் கணவரும், ஆனந்தி அவர்களின் அன்புத் தந்தையாரும், டாக்டர் அரியநாயகம் [அப்பலோ வைத்தியசாலை, இந்தியா] அவர்களின் அன்பு மாமனாரும், திரு. நடராசா, காலஞ்சென்றவர்களான பாலாம்பிகை, சாஸ்வதி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சிறீதரனின் தாய்மாமனும், சுபங்கலி, கோகுலன், அஞ்சலி ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று[26-5-95] அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10-00 மணியளவில் பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சிவநாயகி சிவராசா,
திரு. மு. விவேகானந்தன்.

இல. 417, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். [36795]

### திருமதி இளையாச்சி சரவணமுத்து

திருமதி இளையாச்சி சரவணமுத்து காலமானார்.

இவர் காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராஜரட்ணம், காலஞ்சென்ற சிவமணி, மற்றும் துரைரட்ணம், சரஸ்வதி, மகேஸ்வரி, நவரட்ணம் (கனடா), இராஜலக்சுமி (பிரான்ஸ்), யோகேஸ்வரி, ஜெயரட்ணம் ஆகியோரின் அன்புத் தாயாரும், மார்க்கண்டு (டென்மார்க்), பூமணி, துரைநாயகம், ஆறுமுகம் [பிரான்ஸ்], ஜெகநாதன் [பிரான்ஸ்] ஆகியோரின் மாமியாரும், பாலச்சந்திரன் (நோர்வே), தேவச்சந்திரன் (டென்மார்க்), ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), பிறேமச்சந்திரன் கனடா), மணிமேகலை (கனடா), கேமச்சந்திரன் (நோர்வே), கீதாஞ்சலி (நோர்வே), மைதிலி (நோர்வே), குமதினி சுபாஷினி, சுதர்ஷினி, சுசிக்கலா, கமலினி, வசீகரன், [illegible] ஜ[illegible]ன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யாதவன், யாமினி, ஆதிரையன் இளந்திரையன், ஆதிரை, சாரங்கன், சாரங்கி ஜனகன், வைதமன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று [25-05-95] மாலை 4 30 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
துரைரட்ணம
[மகன்]

77, பாரதி வீதி,
கண்டுக்குளி,
யாழ்ப்பாணம். [36808]

### திருமதி முருகேசு தங்கம்மா

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், குமரகோட்டம் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு தங்கம்மா (நேற்று) 25-5-95 இல் காலமானார்.

அன்னார் சண்முகம் முருகேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற யோகேந்திரம் மற்றும் பரமேஸ்வரி, பொன்னுத்துரை, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 26-5-95 நண்பகல் 12 மணிக்கு கோண்டாவில் இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக காரைக்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு திருநாவுக்கரசு
[மகன்]

குமரகோட்டம்,
கோண்டாவில். (36809)

## விளையாட்டு நிகழ்வுகள்

'உதயன்' நாளிதழின் 10 ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி உதயன் வெற்றிக் கிண்ணத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான — வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை திக்கம் முனையில் உள்ள கழக மைதானத்தில இன்று நடைபெறும் போட்டியில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ பி.ப. 3.45 மனற்காடு சென். அன்ரனீஸ் 'பி' அணி எதிர் வல்வை கழுகுகள் அணி

★ பி.ப 4.45 — வல்வை ஆதிசக்தி 'பி' அணி எதிர் அணணாசிலையடி இ.வி.க அணி. (இ-3)

★ ★ ★

வலி-கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் இணைந்த கழகங்களுக்கு இடையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் போட்டிகளில் மோதும் கழக அணிகள் வருமாறு:-

★ பி.ப. 3மணி — சென். றூட்ஸ் அணி எதிர் சென். அன்ரனீஸ் அணி

★ பி.ப. 4மணி — கலைவாணி அணி எதிர் அறிவொளி அணி.

★ பி ப 5மணி — பொற்பதி அணி எதிர் பாடுமீன் அணி. (இ-3)

★ ★ ★

வண சகோதரர் ஹில்லறி ஜோசப் ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணம் லாசாலா சகோதரர்கள் சபை யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ 3 00 மணி: யாழ் பல்கலைக்கழக 'ஏ'' அணி எதிர் அமல மரித்தியாகிகள் குருத்துவப் பயிற்சி நிலைய அணி.

★ 4 00 மணி: உதயன் வி.க. அணி எதிர் பற்றிஷியன் அணி.

★ ★ ★

''டொனால்ட் கணேஷ் குமார்'' ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்காக யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் 50 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நாளை காலை 9.00 மணி முதல் நடைபெறும் ஆட்டத்தில் உதயன் வி.க. அணியை எதிர்த்து பற்றிஷியன்ஸ் அணி மோதும்.

## ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் மே 26

'புதிய ஆசிரியர் சேவைச் சம்பளத்திட்டமும், உத்தேச கல்வி நிர்வாக அமைப்பும்' என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது

''எடியூகேசன இன்ரநஷனல்'', பிரட்றிக் ஈபேட் மன்றம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகிய அமைப்புக்கள் இணைந்து இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளனர். (இ-3)

---

பல்கலைக்கழக...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் முக்கிய பங்கு வகிக்கிறது.

தொழிற்சங்கப் போராட்டம் இடை நிறுத்தப்பட்டதால் ஜி சி ஈ உயர்தரப்பரீட்சை தடங்கல் இன்றி நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துக்கும், கல்வியமைச்சருக்கும் இடையில் நடந்த பேச்சை அடுத்தே தொழிற்சங்க நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது. (இ 6)

---

குடும்ப...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் குடும்ப பதிவு அட்டைப் பகுதியினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இத்தகைய சரியான முழுமையான விவரங்களைக் கொண்டிராத குடும்பப் பதிவு அட்டைகள் பாவனைக்கு ஏற்றுக்கொள்ள முடியாதவையாகும்.

எனவே பாவனைக்கு உகந்தவை அல்லாத குடும்பப்பதிவு அட்டைகளை தொடர்ந்து வைத்திருப்பதன் மூலம் நீங்கள் எதிர்நோக்கக்கூடிய சிரமங்களை தவிர்க்க ஜூன் 15க்கு முன்னர் உங்கள் பதிவு அட்டைகளை குடும்பப் பதிவு அட்டைச் செயலகங்களின் ஊடாக சரிசெய்து கொள்ளுமாறு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் குடும்பப் பதிவு அட்டை[illegible] பொதுமக்களை[illegible] கேட்டுக் கொள்கின்றனர். (இ)

## களவாடப்பட்ட சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், மே 26

சுன்னாகம், சங்கானை காவல் பணிமனைகளால் மீட்கப்பட்ட ஒருபகுதி சைக்கிள்கள் சுன்னாகம் தமிழீழ மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரிமையாளர்கள் தகுந்த ஆதாரம் காட்டி மன்றின் செயலக நாட்களில் அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

## சாரணர் பரீட்சைகள்

தென்மராட்சி, மே 26

பளை மத்திய கல்லூரியில் முதலாம் வகுப்பு சாரணர் சின்னத்தைப் பெறுவதற்கான செயன்முறைப் பரீட்சைகளும் நேர்முகப் பரீட்சையும் கிளிநொச்சி மாவட்ட சாரணர் ஆணையாளர் க. கோபாலகிருஷ்ணனால் கடந்த 15 ஆம் திகதி நடத்தப்பட்டன.

இப்பரீட்சைகளில் 12 சாரணர்கள் சகல பரீட்சைகளிலும் தேர்ச்சிபெற்று முதலாம் வகுப்பு சாரணர் சின்னத்தைப் பெற்றுக் கொண்டனர்.

1980 ஆம் ஆண்டு முதல், பளை மத்திய கல்லூரி சாரணர்கள் பலர் முதலாம் வகுப்பு சாரணர் பரீட்சைகளில் சித்திபெற்று ஜனாதிபதி சாரணர் சின்னங்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது [--117]

## ஏழு கிராமங்களில...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பலாலி இராணுவத்தினர் அறிவித்தனராம்.

இந்த அறிவித்தல் குறித்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமோ அல்லது ரூபவாஹினி கூட்டுத்தாபனமோ உத்தியோகபூர்வ அறிவிப்பு எதனையும் வெளியிடவில்லை.

இதேவேளை—

ஊரடங்கு உத்தரவு தொடர்பான அறிவித்தல் நேற்று கிராம சேவையாளர்கள் மூலம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

பலாலி இராணுவத்தினரிடம் இருந்து தொலைபேசி மூலம் கிடைத்த இந்த அறிவித்தலை யாழ். அரச அதிபர் அப்பகுதி கிராம சேவையாளர்களுக்கு அறிவித்தார். [illegible] அப்பகுதி கிராம சேவையாளர்கள் தமது பகுதி மக்களுக்கு [illegible] இத்தகவலை அறிவித்[illegible] (அ-3)

## மாணவர் கலைப் பூங்கா

யாழ்ப்பாணம், மே 26

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் கலை பண்பாட்டுப் பிரிவினரால் ஆற்றப்படும் மாணவர் கலைப் பூங்கா - 2 நாளை சனிக்கிழமை மாலை 7.00 மணிக்கு பளை மத்திய கல்லூரியில் இடம் பெறும் என விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் கலை பண்பாட்டுப் பிரிவினர் அறியத்தருகின்றனர். (இ)

## தொலைக்கல்வி பயிற்சிநெறி இறுதிப்பரீட்சை

கொழும்பு, மே 26

ஆசிரியர் தொலைக்கல்வி பயிற்சி நெறிக்கான இறுதிப் பரீட்சை அடுத்த மாதம் 24 ஆம் 25 ஆம் திகதிகளிலும் ஜூலை மாதம் 2 ஆம் திகதியிலும் நடைபெறும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

நாடு முழுவதும் 310 நிலையங்களில் இந்தப் பரீட்சை நடைபெறும். 35. ஆயிரம் பரீட்சாத்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றுவர். (ஒ-3)

## யோகாசன கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 26

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தின் மாதாந்த கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற உள்ளது

அன்றைய தினம் யோகாசன செய்முறை விளக்கமும், யோகி ராஜன், ரவீந்திரன், டாக்டர் தயா சோமசுந்தரம் செல்வன் ஸ்ரீ ஸ்ரீகாந் ஆகியோரின் கருத்துரைகளும் இடம்பெறும். (ஐ-5)

---

யுத்தம...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யங்களை பேசவேண்டாம் என்று குழுத்தலைவர் கேட்டும் அவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார்.

அமைச்சர் தொண்டமான் இந்திய சஞ்சிகைக்கு விடுதலைப் புலிகள் தலைவர் தொடர்பாக தெரிவித்த கருத்தை விமர்சிக்க ஆரம்பித்ததும், பிரதி அமைச்சர் பெர்னாண்டோ புள்ளேக்கும் திலக் கருணாரத்னவுக்கும் இடையில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது. [ல-3]

---

அகதிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் 80க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தொடர்ந்தும் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி நீர்வேலி மாதா கோயில் ஆகியவற்றில் தங்கி உள்ளனர் —

இவர்களில் பதினை மேனிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு உலர் உணவு வழங்கப்பட்டு வருகிறது.

இதே போன்று அச்சுவேலி வடக்கு பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு உலர் உணவு விநியோகம் மேற்கொள்ள கோப்பாய் பிரதேச செயலர் நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

---

ராணுவத்திலிரு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான, உயர் அதிகாரிகளின் பொறுப்பற்ற நடவடிக்கைகள், படையினரின் பதவியில் குழப்பங்களை தோற்றுவித்து அவர்களது நடவடிக்கைகளை பின்னடையச் செய்கின்றன.

இதனாலேயே அரசு மேற்படி உத்தரவை வழங்கியுள்ளதாக தெரிய வருகிறது

இதேவேளை வெளிநாடுகளுக்கு பயிற்சி பெறச் செல்லும் படையினர் மீண்டும் நாடு திரும்ப பின்னடிக்கின்றனர்

இதனால், படையினர் வெளிநாடுகளுக்கு பயிற்சி பெற செல்வதனை தடை செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. (ஐ-5)

# திருமலை, உவர்மலையில் படையினர் சுற்றிவளைப்பு

## 5 தமிழ் இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், மே 26

கடந்த சனியன்று திருகோணமலையில் உவர்மலைப் பகுதியை முற்றுகையிட்ட ஸ்ரீலங்காப் படையினர் தமிழர்களை கைது செய்துள்ளனர்.

அன்று அதிகாலை அந்தப் பகுதியை திடீரென சுற்றிவளைத்த படையினர் மக்கள் அனைவரையும் கிறிஸ்தவ ஆலயத்தில் கூடுமாறு கேட்டனர்.

அதன்பின் சகல வீடுகளிலும் தேடுதல் இடம்பெற்றது.

இச்சுற்றிவளைப்பில் 5 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டனர்.

## பிரிவுபசாரவிழா இன்று

ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியின் அதிபராக பணியாற்றி ஓய்வு பெறும் எஸ். ஏ. இ. இரட்ணராஜாவின் சேவையைப் பாராட்டி கல்லூரியில் இன்று காலை 10 மணிக்கு பிரிவு பசார விழா ஒன்று நடத்தப்படுகிறது.

அதற்கு முன்னதாக காலை 8 மணிக்கு யாழ். புனித மரியாள் பேராலயத்தில் நன்றித் திருப்பலிப் பூசை ஒப்புக் கொடுக்கப்படும். (இ-3)

## தோட்ட வேலைக்கு சென்ற சிலர் பிடிபட்டனர்?

அச்சுவேலி, மே 26

அச்சுவேலி மேற்குப்பகுதியில் நேற்று தோட்டவேலைக்குச் சென்ற சிலரை இராணுவத்தினர் பிடித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இராணுவத்தினருடன் சிவில் உடையில் சிலர் காணப்பட்டனர் என்றும், அவர்கள் தோட்ட வேலைக்குச் சென்ற நபர்களாக இருக்கலாம் என்றும் -

அப் பகுதிக்குச் சென்று தப்பிவந்த இளைஞர் ஒருவர் கூறியுள்ளார்

இதேவேளை அச்சுவேலிப் பகுதியில் வீடு பார்க்க சென்ற இளைஞர் ஒருவரை மோட்டார் சைக்கிளில் வந்த இராணுவத்தினர் பிடித்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-4-3-11-173]

## கொழும்புத் துறைமுகத்துக்கு இந்திய சரகுக் கப்பல்கள் வருவதற்கு தடை விதிப்பு

கொழும்பு, மே 26

கொழும்பு துறைமுகத்தை விடுதலைப் புலிகள் தாக்கலாம் என்ற அச்சுறுத்தல் இருப்பதால் இந்தியாவின் சிறிய சரக்கு கப்பல்களை கொழும்பு துறைமுகத்துக்கு அனுமதிக்க இலங்கை அரசு தடைவிதித்துள்ளது.

கொழும்பு துறைமுக அதிகாரசபை இது தொடர்பான பணிப்புரையை விடுத்துள்ளது.

இந்தியக்கப்பல்கள் காலிக்கு செல்வதால் வீணான நேரம் செலவீனம் ஏற்படுவதாக கூறி இந்த உத்தரவை மறுபரிசீலனை செய்யுமாறு இந்தியா விடுத்த கோரிக்கையை இலங்கை அரசு ஏற்க மறுத்துவிட்டது.

பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களில இந்த முடிவு எடுக்கப்பட்டதாக துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

## இரசாயனத் தாக்குதல் குறித்து பொது மக்களுக்கும் அறிவுறுத்தப்படுமாம்

கொழும்பு, மே 26

விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்படக் கூடிய இரசாயன ஆயுதத் தாக்குதல் குறித்து வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள பாதுகாப்புப் படையினருக்கும் —

வட மத்திய மாகாணத்தில் உள்ள பாதுகாப்புப் படையினருக்கும் —

அம்மாகாணங்களில் உள்ள பொதுமக்களுக்கும் அறிவுறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக 'திவயின' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. [இ-6]

## குமாரதுங்க கொலை விசாரணை: ''இன்ரபோல்'' ஏ.எஸ்.பிக்கு ஆணைக்குழு எச்சரிக்கை

விஜயகுமாரதுங்கவின் கொலை பற்றி விசாரணை நடத்தி வரும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த ''இன்ரபோல்'' பிரிவைச் சேர்ந்த உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஜொராட் விஜயவிக்கிரம ஆணைக்குழுவால கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டார்.

குமாரதுங்கவை கொலை செய்தவரான லயனல் ரணசிங்கவை 1989 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி சி.ஐ.டி. பிரிவினரிடம் இருந்து பொறுப்பேற்று ஹோமகம பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு வந்த பின்னர் அவருக்கு என்ன நடந்தது என்ற உண்மைகளை மறைக்க வேண்டாம் என்று ஆணையாளர்கள் அவருக்கு எச்சரிக்கை விடுத்தனர். (ஒ-3)

---

செஞ்சிலுவை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

லக அதிகாரி மார்க்கோ ஆல்ரும் வருகிறார்.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் செயற்பாடுகள் குறித்து ஆராய வரும் இவர்கள் நாளை கொழும்பு திரும்புவர். (ஒ-3)

## செயற்கை முறை சினைப்படுத்தல் ஆரம்பம்

மந்திகை மிருக வைத்திய நிலையத்தில் தடைப்பட்டிருந்த செயற்கைமுறையிலான கருவூட்டல் சேவை மீண்டும் கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது [ஐ-15]

---

மொறட்டுவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குண்டும் தாக்கி வீசப்பட்டும் அந்த இடத்திலேயே பலியாகினர்.

வீதியில் இருந்து விலகி குடைசாய்ந்திருந்த ஒரு ஜீப்பை இழுத்தெடுக்கும் பணி நடந்து கொண்டிருந்தது. அந்தக் காட்சியைப் பலர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அந்த மக்கள் கூட்டத்தின் மீதே பஸ் மோதியது.

இச்சம்பவத்தை அடுத்து ஆத்திரமுற்ற மக்கள் பஸ்ஸையும் ஜீப்பையும் தீயிட்டுக் கொழுத்தினர் அவை இரண்டும் முற்றாக எரிந்து விட்டன தீயை அணைக்கவந்த தீயணைப்புப் படையினரும் காக்கப்பட்டனர். (ஒ-3)

---

மாமிசம், மீன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் சிறந்த நிலையில் இருப்பதாகவும்—

தொடர்ந்து படையினர் பயிற்சியில் ஈடுபடுவதாகவும் — அவர் தெரிவித்தார்.

யுத்த நடவடிக்கையில் பாதிக்கப்பட்டவர்களைக் கொண்டு செல்ல விமானசேவை நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். [ஒ-3]

இ[illegible] நியூ உதயன் பப்ளிகேசன் ([illegible]) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26-05-1995 இல் அச்சிட்டு வெளி[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org